Rahmath Pathippagam

ரஹ்மத் பதிப்பகம் (ரஹ்மத் அறக்கட்டளை) சார்பில் வெளியிடப்பட்ட ஸஹீஹுல் புகாரியின் கலைச்சொல் விளக்கம் என்ற பகுதியை மாணவர்கள் மற்றும் கல்வியை தேடும் ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் ஒரு வழிகாட்டி நூலக இதனை இஸ்லாம்கல்வி இணையதளத்தில் (www.islamkalvi.com) வெளியிடுகின்றோம். இதனை வேறுவழிகளில் பயன்படுத்த விருப்பம் உள்ளவர்கள் வெளியீட்டாளரை தொடர்பு கொள்ளவும்.

# கலைச்சொல் விளக்கம்

## அகபா

'மக்கா' செல்லும் பாதையில் 'மினா'வுக்கு அருகிலுள்ள ஓர் இடத்தின் பெயர். மதீனாவில் இஸ்லாம் பரவுவதற்குமுன் மதீனாவாசிகளில் சிலர் இந்த இடத்தில் இரு கட்டங்களாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வழங்கிய உறுதிமொழியையே 'பைஅத்துல் அகபா' (அல்அகபா உறுதிப் பிரமாணம், அல்லது அகபா உடன்படிக்கை) என்பர்.

## அகழ்ப் போர்

ஹிஜ்ரீ 4ஆம் ஆண்டு (கி.பி. 627) மதீனா நகர்மீது யூதர்கள் உள்பட அனைத்து அரபுக் குலத்தாரும் திரண்டு வந்து தொடுத்த போர். இதில் எதிரிகளை நகருக்குள் நுழைய விடாமல் தடுக்க அகழ் (கன்தக்) தோண்டப்பட்டது. இதையே 'அஹ்ஸாப் போர்' (பல அணியினர் திரண்டுவந்த போர்) என்றும் கூறுவர்.

## அகீகா

துண்டிக்கப்பட்டது, அகற்றப்பட்டது, களையப்பட்டது என்பன இதன் சொற்பொருள்களாகும். குழந்தை பிறந்த ஏழாவது நாளில், குழந்தையின் நல்வாழ்விற்காக ஆடு அறுத்து தர்மம் செய்வதற்கு 'அகீகா' எனப்படும். அன்றைய தினம் களையப்படும் குழந்தையின் முடிக்கும் அகீகா (களையப்பட்டது) என்பர். அறுக்கப்படும் ஆட்டிற்கும் அகீகா (துண்டிக்கப்பட்டது) எனப்படுவதுண்டு.

## அங்கத் தூய்மை

உளூ. தொழுகை போன்ற இறைவழிபாடுகளை நிறைவேற்றுவதற்குமுன் முகம், கை, கால், தலை ஆகியவற்றை அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்குட்பட்டுத் தூய்மை செய்யும் ஒரு வகை தூய்மை முறை.

## அச்ச நேரத் தொழுகை

(ஸலாத்துல் கவ்ஃப்). போர் மூளும்முன் எதிரிகள் தாக்கலாம் என்ற அச்சம் உள்ள நிலையில் தொழுகை நேரம் வந்துவிடும்போது ஒரேயோர் இமாமின் தலைமையின் கீழ் படைவீரர்கள் இரு அணிகளாகப் பிரிந்து தொழும் கடமையான தொழுகை.

## அத்தஹிய்யாத்

தொழுகை இருப்பில் ஓதப்படும் ஒரு வகைப் பிரார்த்தனை; அல்லது வாழ்த்து. தொழுகையின் முதலாவது மற்றும் இறுதி அமர்வில் 'அத்தஹிய்யாத்து லில்லாஹி...' (எல்லாக் காணிக்கைகளும் அல்லாஹ்வுக்கே உரியன) என்று தொடங்குகிறது இப்பிரார்த்தனை. இறைத்துதி, ஏகத்துவம், நபித்துவம் ஆகியவை குறித்த உறுதிமொழி, நபி (ஸல்) அவர்களுக்காகவும் நமக்காகவும் மற்றும் நன்மக்கள் யாவருக்காகவும் செய்யும் வேண்டுதல் ஆகியன இதில் அடங்கும். இதை 'தஷஹ்ஹுத்' (உறுதிமொழிதல்) என்றும் அழைப்பர்.

## அப்பாசிய்யாக்கள்

நபி (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்களின் பெயரை இணைப்புப் பெயராகக் கொண்ட குறைஷிக் குல முஸ்லிம் ஆட்சியாளர்கள். உமய்யாக்களின் வீழ்ச்சிக்குப்பின் கி.பி. 750ஆம் ஆண்டு (ஹிஜ்ரீ: 132) முதல் கி.பி. 1258ஆம் ஆண்டு (ஹிஜ்ரீ: 656)வரை இஸ்லாமிய உலகத்தை இவர்கள் ஆண்டனர். இவர்களது ஆட்சியில்தான் பஃக்தாத் (இராக்) இஸ்லாமிய ஆட்சியின் தலைநகராக விளங்கிற்று. சர்வதேச அளவில் அறிவுத் தளங்களில் பல்வேறு சாதனைகள் நிகழ்ந்த பொற்காலமாக இவர்கள் காலமே மதிக்கப்படுகிறது.

## அபிசீனியர்

சூடான் இனத்தைச் சேர்ந்த கறுப்பின மக்கள்.

## அபுல்காசிம்

'காசிமின் தந்தை' என்பது இதன் பொருள். இது இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் குறிப்புப் பெயராகும். நபி (ஸல்) அவர்களின் புதல்வரான காசிம் (ரலி) மழலைப் பருவத்திலேயே இறந்துவிட்டார்.

## அபூ

(தந்தை). 'இன்னாரின் தந்தை' என்று ஒருவரைக் குறிப்பால் உணர்த்த, அல்லது அவரைக் கண்ணியப்படுத்த அவருடைய புதல்வர் அல்லது புதல்வியின் பெயருக்கு முன்பு 'அபூ' எனும் சொல்லைச் சேர்த்துக் குறிப்பிடுவது அரபியரின் வழக்கம். (உம்:) அபூஅப்தில்லாஹ் - அப்துல்லாஹ்வின் தந்தை. இதைப் போன்றே உம்மு (தாய்),

இப்னு (புதல்வர்), இப்னத் அல்லது பின்த் (புதல்வி) ஆகிய வார்த்தைகளில் ஒன்றைச் சேர்த்துக் குறிப்பிடுவதும் உண்டு. (உம்) உம்மு ஹபீபா - ஹபீபாவின் தாயார், இப்னு உமர் - உமரின் புதல்வர், இப்னத்து ரசூலில்லாஹ் - அல்லாஹ்வின் தூதருடைய புதல்வியார், பின்த் அபீபக்ர் - அபூபக்ரின் புதல்வி.

## அபூஜஹ்ல்

அம்ர் பின் ஹிஷாம் என்பது இவரது இயற்பெயர். குறைஷிக் குலத்தில் 'பனூ மக்ஸூம்' கிளையினரின் தலைவராக இருந்தார். நபி (ஸல்) அவர்களின் பிரதான எதிரியாக இருந்து பெருமளவில் தொல்லை கொடுத்துவந்த இவர் கி.பி. 623ஆம் (ஹிஜ்ரீ 2) ஆண்டு 'பத்ர் போரி'ல் கொல்லப்பட்டார்.

## அமீர்

தலைவர் என்பது இதன் பொருள். இறைத்தூதருக்குப்பின் வந்த இஸ்லாமிய ஆட்சித் தலைவரை 'அமீருல் முஃமினீன்' (இறைநம்பிக்கையாளர்களின் தலைவர்) என்று கூறுவர். வரலாற்றில் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களே முதன்முதலில் 'அமீருல் முஃமினீன்' என அழைக்கப்பட்டார்கள். படைத் தளபதி, குழுத் தலைவர், ஆளுநர் ஆகிய பொருள்களிலும் இச்சொல் ஆளப்படுவதுண்டு.

## அய்யாமுத் தஷ்ரீக்

'குர்பானி இறைச்சியை வெயிலில் காயவைக்கும் நாட்கள்' என்பது பொருள். இது துல்ஹிஜ்ஜா மாதத்தில் ஹஜ் பெருநாளைக்கு அடுத்த 11, 12, 13 ஆகிய மூன்று நாட்களைக் குறிக்கும். இந்நாட்களில் ஹஜ் பயணிகள் மினாவில் தங்கியிருப்பார்கள் என்பதால், இந்நாட்களுக்கு 'மினா நாட்கள்' (அய்யாமு மினா) எனும் பெயரும் உண்டு.

## அய்யூப் (அலை)

நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் வந்த ஓர் இறைத்தூதர். நபி யூசுஃப் (அலை) அவர்களுக்குப்பின் தென் ஃபலஸ்தீனுக்கும் 'அல்அகபா' வளைகுடாவுக்கும் மத்தியில் 'அத்வம்' பகுதி மக்களுக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. பொறுமைக்குப் பெயர் போனவராய்த் திகழ்ந்தார்கள்.

## அர்ஷ்

ஆட்சிபீடம், சிம்மாசனம், கட்டில், இருக்கை, வீடு, முகடு போன்ற பல பொருள்கள் இதற்கு உண்டு. 'இறைவனின் ஆட்சிபீடம் அல்லது அரியணை' என்னும் பொருளில் இச்சொல் ஆளப்படுகிறது.

## அரக்

(15 ஸாஉ) சுமார் 32. 25 கி. கி. பிடிக்கும் ஒரு முகத்தலளவை.

## அரப் (அரபி மொழி)

தெளிவான பேச்சு, வெளிப்படையான மொழி, உற்சாகம் உள்ளிட்ட பல பொருள்கள் அகராதியில் இதற்கு உண்டு. செங்கடலுக்குக் கிழக்கே உள்ள துணைக் கண்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட இனத்தாரே அரபியர் ஆவர். யஅருப் பின் கஹ்த்தான் என்பவரே முதன்முதலில் அரபி மொழியில் பேசியவர் என்று சொல்லப்படுகிறது. இவர் யமன் நாட்டினரின் தந்தை ஆவார். இவருடைய வழித்தோன்றல்களே 'அல்அரபுல் ஆரிபா' (கலப்படமில்லா பூர்வீக அரபியர்) என அறியப்படுகின்றனர். இவர்களிடையே வளர்ந்து இவர்களின் மொழியில் பேசிய இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களும் அவர்களுடைய வழித்தோன்றல்களும் 'அல்அரபுல் முஸ்த்தஅரிபா' (இடைக்கால அரபியர்) என அழைக்கப்படுகின்றனர். இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய புதல்வரே நபி இஸ்மாயீல் (அலை) அவர்கள்.

## அரஃபா (அரஃபாத்)

புனித மக்காவுக்குக் கிழக்கே 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள திறந்தவெளி. ஹஜ் செய்யச் செல்பவர்கள் துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாள் (யவ்முல் வக்ஃபா, அல்லது யவ்மு அரஃபா) இங்கு தங்குவது கட்டாயக் கடமையாகும். இங்கு செய்யப்படும் பிரார்த்தனையை மார்க்கம் சிறப்பாகக் கருதுகிறது.

## அரபு தீபகற்பம்

(ஜஸீரத்துல் அரப்). இது, செங்கடலுக்கும் வளைகுடாவுக்கும் இடையே தென்மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள துணைக் கண்டம் ஆகும். சஊதிய்யா, யமன், உமான், (ஓமன்), ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தர், குவைத் ஆகிய நாடுகள் இதில் அடங்கும்.

## அல்லாஹ்

இறைவன்; கடவுள். அரபு மொழியில் ஒரேயோர் இறைவனைக் குறிக்கும் சொல். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை என்பது இஸ்லாத்தின் மூலக் கோட்பாடாகும். "(அனைத்துலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்ற எல்லாம் வல்ல தூய) இறைவன் ஒருவனே வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவன்" என்பதே இதற்குப் பொருள். மாறாக, அல்லாஹ் என்பது முஸ்லிம்களின் கடவுள் என்று நினைப்பது தவறாகும்.

**(அலை)**

'அலைஹிஸ் ஸலாம்' (அன்னார்மீது சாந்தி உண்டாவதாக!) என்பதன் சுருக்கம். இறைத்தூதர்களுக்குப் பிரார்த்தனை செய்யும் வகையில் அவர்களின் பெயர்களுக்குப் பின் '(அலை)' என்று சுருக்கமாகக் குறிப்பிடுவர்.

**அவ்த்தாஸ்**

'ஹவாஸின்' குலத்தார் குடியிருந்த பகுதியில் இருந்த ஒரு பள்ளத்தாக்கின் பெயர். ஹுனைன் போரில் தப்பியோடிய ஹவாஸின் குலத்தார் மீண்டும் போருக்குத் தயாரானார்கள். அவர்களை ஒடுக்க ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு (கி.பி. 680) நடைபெற்ற போரே 'அவ்த்தாஸ் போர்'. இதற்கு 'அபூஆமிர் படைப்பிரிவு' என்ற பெயரும் உண்டு.

**அவ்ஸ்**

காண்க: அன்சாரிகள்.

**அறியாமைக் காலம்**

(அய்யாமுல் ஜாஹிலிய்யா). இஸ்லாத்திற்கு முந்தைய இருண்ட காலம். ஓரிறை அறிவும் மார்க்க நெறிகளும் இல்லாத, குலமாச்சரியங்கள் கோலோச்சிய அன்றைய கலாசாரத்திற்கும் ஜாஹிலிய்யா எனப்படுவதுண்டு. பண்பாட்டுப் பஞ்சம் நிறைந்த அன்றைய மக்களின் நிலை, நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப்பின் 'சிறந்த தலைமுறை' (கைருல் குரூன்) என்ற நிலைக்கு உயர்ந்தது.

**அறிவிப்பாளர்தொடர்**

(சனத் அல்லது இஸ்னாத்). ஒரு நபிமொழி நபி (ஸல்) அவர்களிடமிருந்து, யார் யார் வழியாக நூலாசிரியர்வரை வந்துசேர்ந்தது என்பதைப் பொறுத்தே அது நபிமொழியா, இல்லையா எனத் தீர்மானிக்கப்படும். அறிவிப்பாளர்களின் அந்தச் சங்கிலித் தொடருக்கே 'அறிவிப்பாளர்தொடர்' எனப்படுகிறது. ஆதாரபூர்வமான எல்லா நபிமொழி நூல்களும் இவ்வமைப்பிலேயே தொகுத்துப் பாதுகாக்கப்பெற்றுள்ளன. இவ்வாறான ஆதாரபூர்வ நூல்களிலிருந்து நபிமொழிகளை எடுத்தாளும்போது நபியவர்களை நேரடியாகச் சந்தித்த நபித்தோழரின் பெயர் மட்டுமே இன்று குறிப்பிடப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நபிமொழியின் அறிவிப்பாளர் பட்டியலை அறிய விரும்புவோர் அந்த நபிமொழி இடம்பெற்ற நூலின் அரபி மூலத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

**அன்சாரிகள்**

'அன்சார்' என்பதற்கு 'உதவியாளர்கள்' என்பது சொற்பொருளாகும். நபி (ஸல்)

அவர்களின் காலத்தில் வாழ்ந்த மதீனா நகர முஸ்லிம்களை இது குறிக்கும். தமது பிறந்தகமான மக்காவைத் துறந்து மதீனாவில் குடியேறிய நபிகளாருக்கும், அவர்கள்தம் தோழர்களுக்கும், பிற பகுதிகளிலிருந்து மதீனாவிற்கு வந்த முஸ்லிம்களுக்கும் அனைத்து வகையிலும் ஆதரவளித்தமையால் பிரத்யேகமாக மதீனா முஸ்லிம்களுக்கு இப்பெயர் வரலாயிற்று. யமன் நாட்டிலிருந்த 'மஃரிப்' நீர்த்தேக்கத்தில் கி.பி. 542 - 570 வாக்கில் உடைப்பு ஏற்பட்டபோது அங்கிருந்து வந்து மதீனாவில் குடியேறிய 'அவ்ஸ்' மற்றும் 'கஸ்ரஜ்' ஆகிய இரு பெரும் குலத்தாரே பின்பு அன்சாரிகள் எனப்பட்டனர்.

## அஸ்ர்

பிற்பகலின் நடுப் பகுதியிலிருந்து சூரியன் மறையும்வரையுள்ள நேரத்திற்கே 'அஸ்ர்' எனப்படுகிறது. இந்நேரத்தில் நிறைவேற்றப்படும் கடமையான தொழுகைக்கே 'அஸ்ர் தொழுகை' என்பர்.

## அஸ்ல்

புணர்ச்சி இடைமுறிப்பு (Coitus Interruptus). உடலுறவின்போது பெண்குறிக்குள் விந்தைச் செலுத்தாமல் வெளியேற்றுவதை இது குறிக்கும்.

## அஹ்ஸாப்

காண்க: அகழ்ப் போர்.

## ஆத்

கி.மு. 2538ஆம் ஆண்டு வாக்கில் வாழ்ந்த அரபுப் பழங்குடியினர். அவர்கள் தென் அரேபியாவில் வசித்துவந்தனர். அதன் எல்லை கிழக்கே பாரசீக வளைகுடாவின் வடக்கிலிருந்து மேற்கே செங்கடலின் தெற்குவரை விரிந்திருந்தது. இன்றைய யமன் (ஏமன்) நாடு இதில் அடங்கும். 'ஆத்' சமூகத்தாரின் வமிசாவளியானது நபி நூஹ் (அலை) அவர்களுடன் இணைகிறது. ஆத் பின் இரம் பின் சாம் பின் நூஹ் என்பதே அந்த வமிசாவளியாகும். ஆத் சமூகத்தாரை நல்வழிப்படுத்த அவர்களில் ஒருவரான ஹூத் (அலை) அவர்களைத் தன்னுடைய தூதராக அல்லாஹ் நியமித்தான். உலக வரலாற்றில் இவர்கள் முதலாவது ஆத் (ஆதுல் ஊலா) என்று அறியப்படுகின்றனர். இரம் கூட்டத்தார் என்பதும் இவர்களையே குறிக்கும்.

## ஆதம் (அலை)

ஆதாம். ஆதி மனிதரும் ஆதி இறைத்தூதரும் ஆவார். ஆதி மனிதர்களான ஆதம் - ஹவ்வா தம்பதியரிலிருந்தே மனித குலம் பல்கிப் பெருகிற்று.

## ஆதமின் மகன்

இப்னு ஆதம். மனிதன்.

## ஆமீன்

'அப்படியே ஆகட்டும்' என்பது பொருள். 'சிரியாக்' அல்லது 'ஹீப்ரு' மொழிச் சொல்லான இது, "இறைவா! ஏற்றுக்கொள்வாயாக!" எனும் பொருளில் ஆளப்படுகிறது.

## ஆஷூரா

இஸ்லாமிய ஆண்டின் முதல் மாதமான முஹர்ரம் மாதத்தின் பத்தாவது நாள்.

## இகாமத்

'நிலைநாட்டல்' என்பது இதன் சொற்பொருள். கூட்டுத் தொழுகை நடைபெறப் போவதாகச் செய்யப்படும் அறிவிப்பை இது குறிக்கும். இது பள்ளிவாசலுக்குள் இருப்பவர்கள் எழுந்து கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்படும் அழைப்பாகும்.

## இணைவைத்தல்

ஷிர்க்; பல தெய்வக் கொள்கை. ஏக இறைவனுக்கு இணையாகப் பிற பொருட்களையோ, மனிதர்களையோ, உயிரினங்களையோ நம்புவதற்கே இணைவைத்தல், அல்லது இணை கற்பித்தல் எனப்படும். ஏக இறைவனுக்கே உரித்தான பண்புகள், தனித்தன்மைகள், வழிபாடுகள், அதிகாரங்கள் ஆகியவற்றில் அவனுக்கு இணையாகப் பிறரைக் கருதுவது இணைவைப்பில் அடங்கும். இவ்வாறு கருதுகின்றவருக்கு 'முஷ்ரிக்' (இணைவைப்பாளர்) என்பர். 'முஷ்ரிகூன்' அல்லது 'முஷ்ரிகீன்' என்பது இதன் பன்மையாகும். இணைவைத்தல் மன்னிக்க முடியாத குற்றம் என்று குர்ஆன் கூறுகிறது.

## இத்தா

காத்திருப்புக் காலம். 'கணித்தல்', 'எண்ணுதல்', 'காத்திருத்தல்' என்பன இதன் சொற்பொருள்களாகும். கணவனால் மணவிலக்கு அளிக்கப்பட்ட பெண் மூன்று மாதவிடாய் காலமும், கணவனை இழந்த கைம்பெண் நான்கு மாதம் பத்து நாட்களும் மறுமணம் செய்துகொள்ளாமல் தம் கணவர் வீட்டில் தங்கி இருப்பதே 'இத்தா' எனப்படும். மாதவிடாய் அற்றுப்போன பெண் மணவிலக்குச் செய்யப்பட்டால், மூன்று மாதங்கள் 'இத்தா' இருக்க வேண்டும். கருவுற்றிருக்கும் பெண்ணின் இத்தா காலம், குழந்தை பெற்றெடுக்கும்வரை ஆகும். கணவனை இழந்த கர்ப்பிணிப் பெண்ணின் இத்தா காலமும் குழந்தை பெற்றெடுக்கும்வரையே ஆகும்.

## இத்ரீஸ் (அலை)

இறைத்தூதர் நூஹ் (அலை) அவர்களின் பாட்டனாரான இவர், நபி ஆதம் (அலை) மற்றும் ஷீஸ் (அலை) ஆகியோருக்குப் பின்னால் வந்த முதல் நபியாவார்.

## இஃதிகாஃப்

'தங்கியிருத்தல்', 'தடுத்துக்கொள்ளல்' என்பன இதன் சொற்பொருள்களாகும். இறைவனுக்காக, இறைத்தூதர் காட்டிய வழிமுறையில் குறிப்பிட்ட காலம் பள்ளிவாசலில் தங்கும் ஒரு வகை வழிபாடு.

## இப்ராஹீம் (அலை)

(ஆப்ரஹாம்). தென் இராக்கிலுள்ள 'ஊற்-Ur' எனும் ஊரில் பிறந்த இறைத்தூதர். இறைவனின் உற்ற தோழர் (கலீலுல்லாஹ்) எனும் சிறப்புப் பெயர் பெற்ற அன்னார், ஓரிறைக் கொள்கைக்காக எல்லாவிதமான தியாகங்களையும் மேற்கொண்டார்கள். இறைத்தூதர்களான இஸ்மாயீல் (அலை), இஸ்ஹாக் (அலை) ஆகியோரின் தந்தை ஆவார்கள்.

## இப்லீஸ்

ஷைத்தான்களின் தந்தைக்குப் பெயர். இவன் நெருப்பால் படைக்கப்பட்டவன். ஜின் (Ginn) இனத்தைச் சேர்ந்தவனான இவனுக்குச் சந்ததிகளும் சேனைகளும் உண்டு. மறைவாக இருந்துகொண்டே மனிதர்களைத் தீய வழியில் செலுத்துவதே இவர்களின் பிரதானமான பணியாகும்.

## இப்னு

மகன். காண்க: அபூ.

## இப்னு உமர் தீவு

டைக்ரிஸ் நதிக்கரையில் அமைந்த பழைய துருக்கிய நகரம். சிரியாவின் எல்லையில் அமைந்த இந்நகரம் மத்திய நூற்றாண்டுகளில் சுறுசுறுப்பான துறைமுகமாக விளங்கியது. 'கர்டோ' தீவு என்றும் இதை அழைப்பர். இந்தத் தீவின் வடகிழக்கே குர்திஸ்தானில் பூடான் மாகாணத்தில் உள்ள 'ஜூதி' எனும் மலையில்தான் நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பல் நிலைகொண்டது.

## இஃப்ராத்

ஹஜ்ஜில் ஒரு வகை. 'தனியாகச் செய்தல்' என்பது இதன் சொற்பொருளாகும். ஹஜ்ஜுடைய மாதங்களில் ஹஜ்ஜுக்காக மட்டுமே இஹ்ராம் கட்டி, உறுதிமொழி எடுத்து, ஹஜ் கிரியைகளை முழுமையாக நிறைவேற்றுவதை இது குறிக்கும்.

## இம்ரான்

அன்னை மர்யம் (அலை) அவர்களின் தந்தை.

## இமாம்

'தலைவர்' என்பது சொற்பொருள். முதன்மைப் பொறுப்பு வகிப்பவர், கூட்டுத் தொழுகையை முன்நின்று நடத்துபவர், வழிகாட்டி, முன்னோடி, பாதை ஆகிய பொருள்களும் இதற்கு உண்டு.

## இல்யாஸ் (அலை)

எலியா. (கி.மு. 8ஆவது நூற்றாண்டு.) நபி ஹாரூன் (அலை) அவர்களின் வழித்தோன்றலில் வந்த ஓர் இறைத்தூதர். அன்றைய ஷாம் (சிரியா) நாட்டு மக்களுக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள்.

## இறைநம்பிக்கையாளர்

முஃமின்; மார்க்க விசுவாசி. ஓரிறைவன், வானவர்கள், இறைத்தூதர்கள், இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்), இறைவனால் அருளப்பெற்ற முந்தைய வேதங்கள், இறுதி வேதம் குர்ஆன், மறுமை நாள், விதி ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்டவர்.

## இறைநம்பிக்கையாளர்களின் அன்னை

உம்முல் முஃமினீன். நபி (ஸல்) அவர்களின் துணைவியார்.

## இறைநம்பிக்கையாளர்களின் தலைவர்

காண்க: அமீர்.

## இறைமறுப்பாளர்

காஃபிர்; அவிசுவாசி. இறைநம்பிக்கையாளர் என்பதன் எதிர்ச்சொல். இதற்கு மறைப்பவர், மறுப்பவர், நன்றி கொன்றவர் என்பன சொற்பொருள்களாகும். ஏக இறைவனை, அல்லது அவனுடைய கட்டளைகளை ஏற்க மறுப்பவரை இச்சொல் குறிக்குமே ஒழிய இது ஒரு வசைச் சொல் அன்று.

## இன்ஜீல்

கிரேக்க மொழிச் சொல்லான இதற்கு நற்செய்தி (Gospel) என்பது பொருள். இறைத்தூதர் ஈசா (அலை) அவர்களுக்கு இறைவன் அருளிய வேதமே இன்ஜீல் ஆகும். இன்று இது பைபிள் - புதிய ஏற்பாடு என்ற பெயரில் அறியப்பட்டாலும், அருளப்பட்ட அதே நிலையில் இப்போது அது இல்லை.

## இன்ஷா அல்லாஹ்

இதற்கு 'அல்லாஹ் நாடினால்' என்பது பொருள். எதிர்காலத்தில் ஒன்றைச் செய்யப்போவதாக வாக்களிக்கும் இறைநம்பிக்கையாளர் இதையும் சேர்த்தே குறிப்பிடுவார். (உம்:) இன்ஷா அல்லாஹ், நாளை வருகிறேன்.

## இஷா

சூரியன் மறைந்து செவ்வானமும் மறைந்த பின்னால் வரும் நேரம். இந்நேரத்தில் நிறைவேற்றப்படும் கடமையான தொழுகையே 'இஷா தொழுகை' ஆகும்.

## இஸ்த்திஹாளா

உயர் உதிரப்போக்கு. சில பெண்களுக்கு மாதவிலக்கு ஏற்படும் காலத்தையும் தாண்டி வெளிவருகின்ற இரத்தப்போக்கிற்கே 'உயர் உதிரப்போக்கு' என்பர். ஒரு பெண்ணுக்கு வழக்கமாக மாதவிலக்கு வரும் நாட்கள் முடிந்துவிட்டால், அவளுக்கு உயர் உதிரப்போக்கு இருந்தாலும் அவள் தொழுகை, நோன்பு போன்ற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால், ஒவ்வொரு தொழுகை நேரத்திலும் தூய்மை செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு தொழுகைக்கும் புதிதாக அங்கத் தூய்மை (உளூ) செய்துகொள்ளவும் வேண்டும்.

## இஸ்மாயீல் (அலை)

கி.மு. 18ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த நபி இஸ்மாயீல் (அலை) அவர்கள் (இஸ்மவேல்), நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மூத்த மகனாவார்கள். இவர்கள் அன்னை ஹாஜருக்குப் பிறந்தவர்கள். 'அரபியரின் தந்தை' எனப் போற்றப்படும் இவர்களின் சந்ததியில்தான் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

## இஸ்ராஃபீல் (அலை)

முக்கியமான வானவர்களில் ஒருவர். உலக அழிவின்போதும், மனிதர்கள் அனைவரும் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படும்போதும் எக்காளம் (ஸூர்) ஊதும் பொறுப்பு இவரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இஸ்ராயீல்

பனூ இஸ்ராயீல்; இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள். இறைத்தூதர் யஅகூப் (Jocob கி.மு. 19ஆவது நூற்றாண்டு) அவர்களுக்கு 'இஸ்ராயீல்' (அல்லாஹ்வின் அடியார்) என்ற பெயர் உண்டு. அன்னாரின் சந்ததிகள் 'பனூ இஸ்ராயீல்' (இஸ்ராயீலின் மக்கள், இஸ்ரவேலர்கள்) என அழைக்கப்படுகின்றனர். கிறிஸ்து பிறப்பதற்குமுன் ஒரே இனத்தாராயிருந்த அன்னாரின் வழித்தோன்றல்கள், பிறகு யூதர்கள் என்றும் கிறித்தவர்கள் என்றும் பிரிந்துவிட்டனர்.

## இஸ்ஹாக் (அலை)

ஈசாக். நபி இப்ராஹீம் - சாரா தம்பதியரின் புதல்வரான இவர்களும் ஓர் இறைத்தூதர் ஆவார்கள். அன்னாரின் மைந்தரே நபி யஅகூப் (அலை) அவர்கள். ஆகவேதான், அன்னாரை 'இஸ்ரவேலர்களின் தந்தை' என்கின்றனர்.

## இஸ்லாம்

சாந்தியளித்தல், கீழ்ப்படிதல், அடிபணிதல், ஒப்படைத்தல், இறைவனை மட்டுமே வழிபடுதல் என்பன இதன் சொற்பொருள்களாகும். பொதுவாக இறைத்தூதர் எடுத்துரைத்த மார்க்கத்தை ஏற்று, அதை வாழ்வில் கடைப்பிடிப்பதே இஸ்லாமாகும். முதல் இறைத்தூதரிலிருந்து இறுதி இறைத்தூதர்வரை அனைவரும் இஸ்லாமையே போதித்தனர்.

## இஹ்சான்

அழகிய முறையில் செயலாற்றல்; நன்முறையில் நடந்துகொள்ளல்; அழகுறச் செய்தல்; அழகாக்குதல்; நன்மை புரிதல்; உபகாரம் செய்தல்; பயனளித்தல்; உறுதிபடச் செய்தல்; உளத்தூய்மையுடனும் உள்ளச்சத்துடனும் வழிபடுதல் அல்லது செயல்படுதல்.

## இஹ்ராம்

'விலக்கிக்கொள்ளல்' என்பது சொற்பொருளாகும். 'ஹஜ்' அல்லது 'உம்ரா' வழிபாட்டை நாடி, உறுதிமொழி எடுத்துக்கொள்வது; அதன் வழிமுறைகளையும் நிபந்தனைகளையும் பேணுவது. அப்போது அணியும் எளிய ஆடைக்கு 'இஹ்ராம் ஆடை' என்பர்.

## ஈசா (அலை)

இயேசு (Jesus). இறைத்தூதர்களில் ஒருவரான இவர்கள் கி.மு. 4ஆவது ஆண்டில் பாலஸ்தீனத்தில் உள்ள நாசிரா (Nazareth) என்னும் ஊரில் மர்யம் (அலை) அவர்களுக்கு, ஆண் துணையின்றி அற்புதமான முறையில் பிறந்தார்கள்.

## ஈத்

பண்டிகை அல்லது பெருநாள். 'ஈத்' எனும் சொல்லுக்குத் 'திரும்ப வரக்கூடியது' என்பது பொருள். வாழ்க்கையில் வசந்தமும் மகிழ்ச்சியும் திரும்பத் திரும்ப வர வேண்டும் என்ற பொருளில் இப்பெயர் வழங்கலாயிற்று. மகிழ்ச்சியைக் கொண்டாடும் முகமாக இஸ்லாத்தில் இரு பெருநாள்கள் உண்டு: 1. ஈதுல் அள்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்). 2. ஈதுல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்). இந்நாட்களில் சிறப்புத் தொழுகை தொழுதல், ஏழைகளை மகிழ்வித்து மகிழும் வகையில் தர்மம் செய்தல், பிராணிகளை அறுத்துத் தாமும் உண்டு பிறருக்கும் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு ஆரோக்கியமான நடைமுறைகளை இஸ்லாம் கொண்டுவந்துள்ளது.

## ஈதுல் அள்ஹா

ஹஜ் பெருநாள். ஹிஜ்ரீ ஆண்டின் 12ஆவது மாதமான துல்ஹஜ் மாதம் 10ஆவது நாள் முஸ்லிம்கள் கொண்டாடுகின்ற பண்டிகை. இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறைவனின் கட்டளைப்படி தம் புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முன்வந்த தியாகத்தை நினைவுகூர்கின்ற வகையில் இந்நாளில் முஸ்லிம்கள் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய பிராணிகளை இறைவனுக்காக அறுத்து ஏழைகளுக்கு அளித்து இப்பண்டிகையைக் கொண்டாடுவதால் இது 'ஈதுல் அள்ஹா' (தியாகத் திருநாள்) என்று அழைக்கப்படுகிறது.

## ஈதுல் ஃபித்ர்

நோன்புப் பெருநாள். ஹிஜ்ரீ ஆண்டின் 9ஆவது மாதமான ரமளான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று அடுத்த நாள் ஷவ்வால் மாதம் முதல் நாளன்று முஸ்லிம்கள் கொண்டாடுகின்ற பண்டிகை. இதை 'ஈதுல் ஃபித்ர்' (நோன்பை நிறைவு செய்த பண்டிகை) என்றும், ஏழைகளுக்கு ஈந்து மகிழ்வதால் 'ஈகைத் திருநாள்' என்றும் அழைப்பர்.

## உம்மு

காண்க: அபூ.

## உம்மீ

தாயைச் சார்ந்தவர் என்பது பொருள். பொதுவாக எழுத வாசிக்கத் தெரியாத, தாயின் இயல்புகளை மட்டுமே பெற்ற மனிதரை 'உம்மீ' என்பர் அரபியர். நபி (ஸல்) அவர்களின் காலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் அரிதாகவே காணப்பட்டனர். எனவே, அன்றைய மக்கள் 'உம்மிய்யூன்' என்றழைக்கப்பட்டனர். அவர்களிடையேதான் நபி (ஸல்) அவர்கள் அறிவொளி ஏற்றினார்கள். நபி (ஸல்) அவர்களும் எழுத வாசிக்கத் தெரியாத 'உம்மீ'யாகவே இருந்தார்கள்.

## உம்ரத்துல் களா

விடுபட்ட உம்ரா. ஹிஜ்ரீ 7ஆம் ஆண்டு (கி.பி. 628) நபிகளாரும் 2000 நபித்தோழர்களும் நிறைவேற்றிய உம்ரா. ஹிஜ்ரீ 6ஆம் ஆண்டு நிறைவேற்ற முடியாமற்போன உம்ராவுக்குப் பிரதியாகவே இதை நிறைவேற்றினர்.

## உம்ரா

நாடுதல், சந்தித்தல், வழிபடுதல் என்பன இதன் சொற்பொருள்களாகும். புனித கஅபாவைத் தரிசித்து, இறைவனை வழிபடும் ஒரு வகை வழிபாடு 'உம்ரா' ஆகும். 'ஹஜ்' எனும் வழிபாட்டிற்குக் குறிப்பிட்ட காலம் உண்டு. உம்ராவுக்குக் கால நிர்ணயம் ஏதுமில்லை.

## உமய்யாக்கள்

பனூ உமய்யா பின் அப்தி ஷம்சு பின் அப்தி மனாஃப். அப்து மனாஃபுடைய புதல்வரான அப்தி ஷம்சு என்பாரின் வழித்தோன்றல்களே உமய்யாக்கள். இவர்களின் வழித்தோன்றல்களில் வந்த கலீஃபாக்கள் டமாஸ்கஸைத் தலைமையகமாகக் கொண்டு 92 வருடங்கள் ஆண்டனர். (ஹிஜ்ரீ 40-132 / கி.பி. 661-750.) முஆவியா பின் அபீசுஃப்யான் (ரலி) அவர்களே இவர்களில் முதல் ஆட்சியாளர் ஆவார். இரண்டாம் மர்வான் என்பாரே கடைசி ஆட்சியர் ஆவார். பின்பு அப்பாசியாக்களால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது உமய்யாக்கள் அங்கிருந்து சென்று ஸ்பெயினை ஆண்டனர். அங்கு குர்துபாவை தலைமையகமாகக் கொண்டு 284 வருடங்கள் ஸ்பெயினை ஆண்டனர். (ஹிஜ்ரீ 138-422 / கி. பி. 756-1031.)

## உமர் பின் அப்தில் அஸீஸ்

ஹிஜ்ரீ 61-101 / கி.பி. 681-720. உமய்யா ஆட்சியாளர்களில் எட்டாமவர் (ஹிஜ்ரீ: 99 - கி.பி. 717). நேர்வழி கலீஃபாக்களில் ஐந்தாமவர். நிர்வாகம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதில் தனிக்கவனம் செலுத்தினார்கள்.

## உள்ஹிய்யா

குர்பானி. 'முற்பகல் நேரத்தைச் சேர்ந்தது' என்பது இதன் சொற்பொருளாகும். துல்ஹஜ் மாதம் பத்தாவது நாள் கொண்டாடப்படும் 'ஈதுல் அள்ஹா' ஹஜ் பெருநாளை முன்னிட்டு அறுக்கப்படும் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய குர்பானிப் பிராணிகளே 'உள்ஹிய்யா' எனப்படுகிறது. குர்பானிப் பிராணிகளை பெரும்பாலும் முற்பகல் நேரத்திலேயே அறுத்துப் பலியிடுவதால் 'உள்ஹிய்யா' என இதற்குப் பெயர் வந்தது.

## உளூ

காண்க: அங்கத் தூய்மை.

## உஸ்ஸா

அறியாமைக் காலத்தில் குறைஷியர் வழிபட்டுவந்த ஒரு சிலையின் பெயர். இது 'லாத்' மற்றும் 'மனாத்' ஆகிய சிலைகளுக்கு அருகில் கஅபாவில் வைக்கப்பட்டிருந்தது. மக்கா வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் அந்தச் சிலையை அகற்றுமாறு நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட, காலித் பின் அல்வலீத் (ரலி) அவர்கள் அதை அகற்றினார்கள்.

## உஹுத்

மதீனாவுக்கு வடக்கே மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு மலை. ஹிஜ்ரீ 3ஆம் ஆண்டு (கி.பி. 625) ஷவ்வால் மாதத்தின் மத்தியில்

இறைநம்பிக்கையாளர்களுக்கும் இறைமறுப்பாளர்களுக்கும் இடையே இங்கு நடைபெற்ற சண்டையே 'உஹுத் போர்' எனப்படுகிறது.

### ஊக்கியா

122.472 கிராம் எடை கொண்ட அக்கால அரபியரின் பழைய அளவை.

## கஅபா (கஅபத்துல்லாஹ்)

புனித மக்காவிலுள்ள சதுர வடிவிலான புனித இறையில்லம்; உலகில் முதன் முதலாக ஓரிறை வழிபாட்டிற்காக நிர்மாணிக்கப்பெற்ற இறையாலயம். இந்த ஆலயம் அமைந்துள்ள திசையை முன்னோக்கியே உலக முஸ்லிம்கள் அல்லாஹ்வைத் தொழுகிறார்கள்; இதைத் தரிசித்து இறைவனை வழிபடவே புனித ஹஜ் மற்றும் உம்ரா பயணம் மேற்கொள்கிறார்கள்.

### கசாமா

அல்கசாமா. சத்தியம் என்பது இதன் சொற்பொருள். ஓர் இடத்தில் ஒரு கொலை நடந்துவிட்டது. கொலைகாரர் யார் என்று தெரியவில்லை. கொலைகாரரைக் கண்டுபிடிக்க எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை. இந்நிலையில், தாம் இக்கொலையைச் செய்யவில்லை என்றும் கொலையாளி யார் என்பது தமக்குத் தெரியாது என்றும் அந்தப் பகுதி மக்கள் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்ய வேண்டும். அவ்வாறு சத்தியம் செய்துவிட்டால், அவர்கள் நிரபராதிகள் எனக் கருதப்படுவார்கள். கொலைக்கான இழப்பீடு அரசின் கைவசமுள்ள பொதுநிதியிலிருந்து (பைத்துல் மால்) கொலையுண்டவரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும். இவ்வகை சத்தியமே 'கசாமா' ஆகும்.

## கப்று

இறந்தவர்கள் புதைக்கப்படும் அடக்கத் தலம்; முஸ்லிம்களின் வழக்கில் 'மண்ணறை' (சமாதி) என்றும் கூறுவர். பன்மை 'குபூர்'. மையவாடி என்பதற்கு 'மக்பரா' என்பர்.

## கஃபன்

சவக்கோடி. இறந்தவர்களை அடக்கம் செய்யும்போது அவர்களுக்கு அணிவிக்கப்படும் வெள்ளாடை.

## கராஜ்

இஸ்லாமிய அரசின் பாதுகாப்பில் வாழும் முஸ்லிமல்லாதோர் ஆண்டுக்கு ஒரு முறை குறிப்பிட்ட அளவு தமது செல்வத்திலிருந்து அரசுக்குச் செலுத்த வேண்டிய ஒரு வகை நில வரி.

### கலீஃபா

'பிரதிநிதி' என்பது இதன் சொற்பொருள். நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் இஸ்லாமிய மண்ணை ஆண்ட முஸ்லிம் ஆட்சித் தலைவர்கள் 'கலீஃபாக்கள்' எனப்பட்டனர்.

### களா

கடமையான வழிபாடுகளை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும்போது, அவற்றுக்குரிய நேரம் கடந்து வேறு காலங்களில் அவற்றை நிறைவேற்றுவது.

### கஸ்ர்

சுருக்குதல் என்பது சொற்பொருள். கட்டாயமான நான்கு ரக்அத் தொழுகைகளை பயணத்தின்போது இரண்டு ரக்அத்களாகச் சுருக்கித் தொழுவதற்கே 'கஸ்ர் தொழுகை' எனப்படுகிறது.

### கஸ்ரஜ்

காண்க: அன்சாரிகள்.

### ஃகஸ்வா

அறப்போர். மதீனாவைத் தலைநகராகக் கொண்ட இஸ்லாமிய அரசில் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பதற்காக இறையுத்தரவுப்படி நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் புறப்பட்டுச் சென்ற போருக்கு ஃகஸ்வா (ஃகஸ்வத்) என்பர். நபி (ஸல்) அவர்கள் தலைமையில் இவ்வாறு 19 போர்கள் நடைபெற்றன. இவற்றில் எட்டு போர்களில் மட்டுமே நபியவர்கள் நேரடியாகக் களத்தில் இறங்கிப் போரிட்டார்கள். பன்மை: ஃகஸவாத்.

### ஃகனீமத்

போர்ச் செல்வம்; போரில் எதிரிகள் விட்டுச்சென்ற பொருள். இதில் போராளிகளுக்கு ஐந்தில் நான்கு பங்கும், மீதமுள்ள ஒரு பங்கு இறைத் தூதருக்கும் உரியதாகும்.

### காணிக்கைத் தொழுகை

தஹிய்யத்துல் மஸ்ஜித். பள்ளிவாசலுக்குள் நுழைந்ததும் பள்ளிவாசல் காணிக்கையாகத் தொழப்படும் இரண்டு ரக்அத்கள் கொண்ட நபிவழித் தொழுகை.

### காரிஜிய்யா (கவாரிஜ்)

'கிளர்ச்சியாளர்கள்' என்பது பொருளாகும். நான்காம் கலீஃபா அலீ பின் அபீதாலிப்

(ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய அரசுக்கெதிராகப் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்ட வன்முறையாளர்களை இது குறிக்கும். இராக்கில் கூஃபா நகருக்கருகில் 'ஹரூரா' எனும் இடத்தில்தான் இவர்களின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. எனவே, இவர்கள் 'ஹரூரிய்யாக்கள்' எனவும் அறியப்படுகிறார்கள். இராக்கிலுள்ள பஃக்தாத் அருகில் 'நஹ்ரவான்' எனும் இடத்தில் ஹிஜ்ரீ 37 (கி.பி.658) ஆம் ஆண்டு கலீஃபா அலீ (ரலி) அவர்களால் இவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இருப்பினும், இவர்களின் குழப்பம் தொடர்ந்தது. இந்தக் கொள்கையில் பிடிப்பு கொண்ட அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் என்பவராலேயே அலீ (ரலி) அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

## காஃபிர்

காண்க: இறைமறுப்பாளர்.

## கிப்லா

முன்னோக்கும் திசை என்பது சொற்பொருள். உலக முஸ்லிம்கள் அனைவரும் மக்காவிலுள்ள புனித இறையில்லம் கஅபாவை முன்னோக்கியே தொழ வேண்டும். கஅபா உள்ள திசை 'கிப்லா' என்று அழைக்கப்படுகிறது.

## கிரகணத் தொழுகை

சூரிய, சந்திர கிரகணங்களின்போது ஏற்படும் பாதிப்புகளிலிருந்து இறைவனிடம் பாதுகாப்புக் கோரும் நோக்கத்தில் நடத்தப்படும் சிறப்புத் தொழுகையே கிரகணத் தொழுகை (ஸலாத்துல் குசூஃப்) ஆகும்.

## கிராஅத்

ஓதுதல், ஓதல்முறை. இறைமறையாம் திருக்குர்ஆனை முறையாக ஓதுவதற்கும், ஓதும் முறைக்கும் 'கிராஅத்' என்பர்.

## கிரான்

ஹஜ்ஜில் ஒரு வகை. 'சேர்த்தல்' என்பது இதன் சொற்பொருளாகும். ஒரே நேரத்தில் ஹஜ் மற்றும் உம்ரா இரண்டுக்காகவும் சேர்த்து உறுதிமொழி எடுத்து, உம்ராவை நிறைவேற்றிவிட்டுத் தொடர்ந்து, அதே இஹ்ராமில் நீடித்து ஹஜ் கிரியைகளை நிறைவேற்றுவதற்கு 'கிரான்' எனப்படும்.

## கிஸ்ரா

குஸ்ரூ (Chosroes) பாரசீகப் பேரரசர்களின் புனை பெயர். நபிகளாரின் காலத்தில் இருந்த குஸ்ரூவின் பெயர் அப்ரோயஸ் பின் ஹுர்முஸ் (கி.பி. 590-628). இவருடன் இராக்கில் பாரசீகப் பேரரசு முடிவுக்கு வந்தது.

**கீராத்**

ஓர் அளவையின் பெயர். 'சிறுகச் சிறுக வழங்குதல்' என்பது இதன் சொற்பொருளாகும். ஒரு கீராத் என்பது 213 மில்லி கிராம் அளவாகும். சில வேளைகளில் உஹுத் மலையளவுள்ள பெரும் எடையும் 'கீராத்' எனப்படுவதுண்டு.

**குத்பா**

சொற்பொழிவு.

**குபா**

மதீனாவிற்குத் தென்மேற்கே 2 மைல் தொலைவிலுள்ள ஒரு பழைய கிராமத்தின் பெயர். ஹிஜ்ரத் பயணத்தின்போது நபி (ஸல்) அவர்கள் இங்கு தங்கி, சிறிய அளவில் தொழுமிடம் ஒன்றை அமைத்தார்கள். பிறகு அங்குள்ளவர்களால் பள்ளிவாசல் ஒன்று எழுப்பப்பெற்றது. அதை 'மஸ்ஜிது குபா' (குபா பள்ளிவாசல்) என்கின்றனர்.

**குமுஸ்**

இதற்கு 'ஐந்தில் ஒரு பாகம்' என்பது பொருள். போரில் கிடைத்த செல்வங்களில் நான்கு பாகம் போரில் கலந்துகொண்ட வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். மீதியுள்ள ஒரு பாகம் (1/5) இறைத்தூதருக்கு உரிய நிதியாகும். இதை 'குமுஸ்' என்பர். இந்நிதியை இறைத்தூதர், சேமநல நிதியாகவும் இன்னும் உரிய இனங்களிலும் செலவிடுவார்கள்.

**குர்ஆன்**

இறுதி இறைமறை. உலக மக்கள் யாவருக்கும் நல்வழி காட்ட இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வாயிலாக இறைவன் அருளிய இறுதி இறைவேதம். 114 அத்தியாயங்களில் 30 பாகங்களாக அமைக்கப்பெற்றுள்ளது. 'குர்ஆன்' எனும் அரபிச் சொல்லுக்கு 'ஓதப்படக்கூடியது', 'ஒருங்கிணைக்கப்பட்டது' என்பது பொருள்,

**குர்பானி**

'குர்பான்' எனும் சொல்லுக்கு 'இறைவனின் நெருக்கத்தைப் பெறல்' என்பது பொருள். இறைவனின் அண்மையைப் பெறுவதற்காக அவனது கட்டளைப்படி ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றைப் பலியிட்டு ஏழைகளுக்கு வழங்குவதை இது குறிக்கும். இவ்வாறு இறைவனுக்காக அறுத்துப் பலியிடப்படும் பிராணியைக் குர்பானி பிராணி என்பர்.

**குல்உ**

மணவிலக்கு (குலா). மனைவியிடம் ஈட்டுத்தொகை பெற்றுக்கொண்டு

அவளிடமிருந்து பிரிந்துவிடுவதற்குக் கணவன் சம்மதம் தெரிவித்து, மணவிலக்கு அளிப்பதற்கே வழக்கில் குல்உ (குலா) எனப்படுகிறது. 'கழற்றிவிடல்' என்பது இதன் சொற்பொருளாகும்.

## குறைஷி

குறைஷியர். இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களுடைய வழித்தோன்றல்களில் நள்ர் பின் கினானாவின் சந்ததிகளாகிய அரபு இனத்தார். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ்வமிசத்தைச் சேர்ந்தவர்களே.

## குனூத்

இச்சொல்லுக்கு தொழுகையில் உள்ளச்சம், வெளிப்பேச்சு பேசாதிருத்தல், நீண்ட நேரம் நிற்றல், பிரார்த்தனை செய்தல், தியானித்தல், இறைக்கட்டளையை நிலை நாட்டல், கீழ்ப்படிதல் எனப் பல பொருள்கள் உண்டு. தொழுகையில் நின்றபடி ஓதப்படும் ஒரு குறிப்பிட்ட சிறப்புப் பிரார்த்தனையை இது குறிக்கும். எதிரிகளால் கடுமையான உயிர்ச் சேதம் ஏற்படுவதைப் போன்ற சோதனைகள் நேரும்போது தொழுகையில் ஓதப்படும் பிரார்த்தனையை 'குனூத்' (சோதனை கால்ச் சிறப்புப் பிரார்த்தனை) என்பர்.

## கூஃபா

இராக்கில் யூப்ரடீஸ் நதிக்கு மேற்கே அமைந்துள்ள பெரிய நகரம். இந்நகரத்தை நபித்தோழர் சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் காதிசிய்யா போருக்குப்பின் நிறுவினார்கள்.

## கைஸர்

சீசர் (caesar). கிழக்கு ரோமானியப் பேரரசர்களின் புனைபெயர். நபிகளாரின் காலத்தில் இருந்த சீசரின் பெயர்: ஹிரக்ளீயஸ் (heraclius - கி.பி. 610-641). இவரோடு கிழக்கு ரோமப் பேரரசு முற்றுப்பெற்றது.

## கைபர்

மதீனாவிலிருந்து ஷாம் (சிரியா) நாட்டிற்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள பெரிய நகரம். ஹிஜ்ரீ 7ஆம் ஆண்டு (கி.பி.628) இறைநம்பிக்கையாளர்களுக்கும் யூத இணைவைப்பாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையே 'கைபர் போர்' எனப்படுகிறது..

## சரிய்யா

படைப் பிரிவு. நபி (ஸல்) அவர்கள் தாம் ஒரு போரில் கலந்துகொள்ளாமல் தம்

தோழர்களை அனுப்பிவைத்தால் அந்தப் போருக்கே சரிய்யா (சரிய்யத்) என்பர். நபிகளார் வாழ்வில் இவ்வாறு 38 படைப் பிரிவுகள் அனுப்பப்பெற்றன. பன்மை: சராயா.

## சயீ

ஸஃபா, மர்வா மலைக் குன்றுகளுக்கிடையே ஏழு முறை ஓட்டமும் நடையுமாகச் செல்வது. இது ஹஜ்ஜின் கிரியைகளின் ஒன்றாகும்.

## சலாம்

இஸ்லாமிய முகமன். ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் இதுவும் ஒன்றாகும். இரு முஸ்லிம்கள் சந்திக்கும் சமயம் ஒருவர், 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள்மீது சாந்தி உண்டாவதாக) என்று கூற வேண்டும். பதிலுக்கு மற்றவர், 'வ அலைக்குமுஸ் ஸலாம்' (அவ்வாறே உங்கள்மீதும் சாந்தி உண்டாவதாக) என்று சொல்வது கடமையாகும்.

## சஜ்தா

சுஜூத். சிரவணக்கம். தொழுகையில் நெற்றி, மூக்கு, இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், இரு கால்களின் விரல்கள் ஆகிய உறுப்புகள் தரையில் படும்படி செய்யப்படும் சிரவணக்கம். இது இறைவனுக்கு மட்டுமே செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

## சஹ்ர்

அ. அதிகாலை முன்னேரம். ஆ. இரவின் பிற்பகுதியில் வைகறைக்குச் சற்று முன்னுள்ள, நோன்புக்காக உணவு உண்ணும் நேரம்; அவ்வாறு உண்ணுதல்; அவ்வாறு உண்ணும் உணவு.

## சாப அழைப்புப் பிரமாணம்

அ. லிஆன். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் சபித்துக்கொள்ளல் என்பது இதன் சொற்பொருள். மனைவிமீது விபசாரக் குற்றச்சாட்டைக் கொண்டுவரும் ஒருவர், அதைத் தகுந்த நான்கு சாட்சிகளைக் கொண்டு நிரூபிக்க முடியாமல் போகும்போது, தம்பதியர் இருவரும் செய்ய வேண்டிய ஒரு வகை சத்தியமே 'சாப அழைப்புப் பிரமாணம்' (லிஆன்) ஆகும். காண்க: குர்ஆன், 24:6-9

ஆ. முபாஹலா. இதற்கு 'வேண்டுதல்', 'விண்ணப்பம்' என்பது சொற்பொருள். ஒரு கொள்கை தொடர்பாக எதிரும் புதிருமான இரு சாராரிடையே கருத்து மோதல் ஏற்பட்டு, அது குறித்து ஒருவர் எடுத்துவைக்கும் சான்றை மற்றவர் ஏற்காதபோது, ஒவ்வொரு சாராரும் தாமே சத்தியத்தில் இருப்பதாகவும், அசத்தியத்தில் இருப்போர்மீது

அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என்று இறைவனிடம் வேண்டுவதே இஸ்லாமிய வழக்கில் 'சாப அழைப்புப் பிரமாணம்' (முபாஹலா) எனப்படுகிறது.

## சிறு துடக்கு

ஹதஸ். சிறுநீர், மலம், காற்று, பாலுணர்வு கிளர்ச்சி நீர் (மதீ) ஆகியவை வெளியேறுவதற்கே சிறு துடக்கு என்பர். ஏற்கெனவே அங்கத் தூய்மை (உளூ) செய்திருந்த ஒருவருக்குச் சிறு துடக்கு ஏற்பட்டால் அவருக்குத் தூய்மை போய்விடுகிறது. அவர் மீண்டும் அங்கத் தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

## சீஃபுல் பஹ்ர்

'கடற்கரை' என்பது பொருள். ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு ரஜப் (கி.பி. 629 நவம்பர்) மாதம் மதீனாவிலிருந்து அன்றைய 5 நாள் தொலைதூரத்தில் இருந்த கடற்கரை ஓரத்தில் சென்றுகொண்டிருந்த குறைஷியரின் வணிகக் குழுவை வழிமறிக்க, 300 பேர் கொண்ட படையொன்று அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அவர்களின் தலைமையில் சென்றது. இச்சம்பவத்தை 'கடற்கரைப் போர்' என்றும் 'அபூஉபைதா படைப்பிரிவு' என்றும் 'கருவேல இலை படைப்பிரிவு' என்றும் குறிப்பிடுவர்.

## சுப்ஹ்

ஃபஜ்ர். வைகறையில் சூரிய உதயத்திற்கு முன்னுள்ள நேரம். இந்நேரத்தில் நிறைவேற்றப்படும் கடமையான தொழுகைக்கே 'சுப்ஹு தொழுகை' என்றும், 'ஃபஜ்ர் தொழுகை' (வைகறைத் தொழுகை / அதிகாலைத் தொழுகை) என்றும் கூறுவர்.

## சுருக்கத் தொழுகை

காண்க: கஸ்ர்.

## சுலைமான் (அலை)

**Solomon.** நபி தாவூத் (அலை) அவர்களின் மைந்தரான இவர்கள் இறைத்தூதராகவும் பேரரசராகவும் விளங்கினார்கள். ஜெரூசலத்திலுள்ள புனித இறையில்லமான பைத்துல் மக்திஸை இறையாணைக்கிணங்க அவர்கள் புதுப்பித்தார்கள். ஜின் இனமும் மற்ற உயிரினங்களும் அன்னாரின் சொல் கேட்டு நடக்கப் பணிக்கப்பட்டிருந்தன. பிராணிகளின் மொழியை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

## சுன்னா

நபிவழி. நபி (ஸல்) அவர்கள் தம் சொல் மற்றும் செயல்களால் பணித்த, தடை விதித்த, ஊக்கப்படுத்திய நடைமுறைகளையே 'சுன்னா' என்பர். வழிமுறை, இயல்பு, மரபு என்பன இதன் சொற்பொருள்களாகும். பன்மை: சுனன்.

## தக்பீர்

இறைவனைப் பெருமைப்படுத்தல். 'அல்லாஹு அக்பர்' (இறைவன் மிகப் பெரியவன்) என்று சொல்லல். தொழுகையைத் துவங்கும் முகமாகக் கைகளை உயர்த்தும்போது இவ்வாறு கூறுவதற்கு 'தக்பீர் தஹ்ரீம்' (தொழுகையைத் தவிரவுள்ள இதர செயல்களைத் தடை செய்யப்பட்டவையாக ஆக்கும் தக்பீர்) 'ஆரம்ப தக்பீர்' எனப்படுகிறது. இதை 'தக்பீரத்துல் இஹ்ராம்' என்றும் கூறுவர்.

## தஃப்சீர்

விளக்கவுரை; விரிவுரை. திருக்குர்ஆன் வசனங்களுக்கு அளிக்கப்படும் விளக்க வுரைக்கு 'தஃப்சீர்' என்பர். இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் குர்ஆனுக்கு அளித்துள்ள விரிவுரை 'தஃப்சீர் இப்னு கஸீர்' என அழைக்கப்படுகிறது. மேலும், சொல் நோக்கத்தை விளக்கும் பதவுரைக்கு 'தஃப்சீர்' என்றும், பொருள் நோக்கத்தை விளக்கும் விரிவுரைக்கு 'தஃவீல்' என்றும் சிலர் கூறுவர். செவிவழித் தகவலுக்கு 'தஃப்சீர்' என்றும், ஆய்வுக் கருத்துக்கு 'தஃவீல்' என்றும் வேறுசிலர் கூறுவர்.

## தபூக்

மதீனாவிற்கு வடக்கில் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நகரம். ஹிஜ்ரீ 9ஆவது ஆண்டு ரஜப் மாதத்தில் இறைநம்பிக்கையாளர்களுக்கும் கிழக்கு ரோமானிய வேதக்காரர்களுக்கும் இடையே இங்கு நடைபெற்ற போர் 'தபூக் போர்' எனப்படுகிறது.

## தமத்துஉ

ஹஜ்ஜில் ஒரு வகை (முத்அத்துல் ஹஜ்). சுகம் காணல், ஆசுவாசப்படுத்தல், பயனடைதல் என்பன இதன் சொற்பொருள்களாகும். ஹஜ் மாதங்களில் 'உம்ரா' செய்வதற்காக இஹ்ராம் கட்டி உறுதி எடுத்து, உம்ராவின் கடமைகளைச் செய்து முடித்த பின்னர் உம்ராவின்போது விலக்கப்பட்டிருந்த காரியங்களைச் செய்து பயனடைந்துவிட்டு, பின்னர் மீண்டும் எல்லைப் பகுதிக்குச் செல்லாமலேயே ஹஜ்ஜுக்காகப் புதிய இஹ்ராம் கட்டித் தொடர்ந்து ஹஜ் செய்வது 'தமத்துஉ' எனப்படும்.

## தயம்மும்

'உளூ'வுக்கு மாற்றாகச் செய்யப்படும் ஒரு வகை தூய்மை முறை. 'உளூ' எனும் அங்கத் தூய்மை செய்யத் தண்ணீர் கிடைக்காத சமயங்களிலும், நோய்வாய்ப்பட்டிருக்கும் நேரங்களிலும் சுத்தமான மண்ணில் கைகளைப் பதித்து உதறி அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க, நபிகளாரின் வழிமுறைக்கு உட்பட்டு முகம் கைகளில் தடவிக்கொள்ளும் முறை. 'தயம்மும்' என்பதற்கு 'நாடுதல்' என்பது சொற்பொருள்.

## தல்பியா

“லப்பைக். அல்லாஹும்ம லப்பைக். லப்பைக். லா ஷரீக்க லக்க லப்பைக். இன்னல் ஹம்த வந்நிஅமத்த லக்க வல்முல்க். லா ஷரீக்க லக்” என்று கூறுதல். (பொருள்: இதோ, உன் அழைப்பேற்று வந்துவிட்டேன் இறைவா! உனக்கே நான் கீழ்ப்படிகிறேன். இணையில்லாதோனே உனக்கே எல்லாப் புகழும். அருட்கொடையும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு இணையானவர் எவருமில்லை).

## தலாக்

மணவிலக்கு; விவாகரத்து (Divorce).

## தவ்ராத்

தோரா. இறைத்தூதர் மூசா (அலை) அவர்களுக்கு (Moses) இறைவன் அருளிய வேதம். இது விவிலியம் பழைய ஏற்பாடு (Old Testamant) எனக் கருதப்படுகிறது.

## தவ்ஹீத்

ஓரிறைக் கோட்பாடு (Monotheism). அனைத்தையும் படைத்து ஆளுகின்ற இறைவன் ஒருவனே. அவன் தனது உள்ளமையிலும் பண்புகளிலும் தனித்தவன். அவனுக்கு ஒப்பான, நிகரான பொருள் ஏதுமில்லை. இணை துணையற்ற அந்த ஆண்டவனுக்கு ஊண், உறக்கம், பெற்றோர், மனைவி, மக்கள் என எந்தத் தேவையும் இல்லை. அவன் ஆண், பெண் பாலின வேறுபாடு அற்றவன்; ஆதியும் அந்தமும் இறப்பும் பிறப்பும் இல்லாதவன். ஆக்கல், அழித்தல், உயிர் கொடுத்தல், உயிர் எடுத்தல், உயர்வு அளித்தல், தாழ்வு கொடுத்தல் உள்ளிட்ட அனைத்து ஆற்றல்களும் ஒருங்கே உள்ளவன். அனைத்தையும் அறிந்த மகா வல்லவன் அவன். நம் எண்ணவோட்டங்களையும் சிந்தனை அலைகளையும் நிர்ணயிப்பவன் அவனே. நமது இறப்பும் பிறப்பும், உயர்வும் தாழ்வும், கண்ணீரும் புன்னகையும், நோயும் ஆரோக்கியமும், உணவும் பசியும் அவன் கையிலேயே உள்ளன. இத்தகைய சர்வ வல்லமை படைத்த இறைவன் ஒருவன் இருக்கின்றான் என நம்பிக்கை கொள்வதற்கே ‘தவ்ஹீத்’ எனப்படும்.

## தவாஃப்

சுற்றிவரல். புனித கஅபாவை நபிவழிப்படி சுற்றிவரும் ஒரு வகை வழிபாடு. ஹஜ்ஜிலும் உம்ராவிலும் இதற்குப் பிரதான இடமுண்டு. துல்ஹஜ் மாதம் பத்தாவது நாள் ஹஜ் பயணிகள் மினாவிலிருந்து திரும்பிவந்து கஅபாவை ஏழு முறை சுற்றி வருவதை ‘தவாஃபுஸ் ஸியாரத்’ (தரிசனச் சுற்று) என்பர். இறுதியாகச் சுற்றிவரும் தவாஃபை ‘தவாஃபுல் வதா’ (விடைபெறும் சுற்று) என்பர்.

## தவாஃபுல் இஃபாளா

'திரும்பியபின் சுற்றல்' என்பது இதன் சொற்பொருளாகும். ஹாஜிகள் துல்ஹஜ் மாதம் பத்தாவது நாள் ஷைத்தானுக்குக் கல்லெறிந்து, குர்பானி கொடுத்து, தலைமுடி களைந்தபின் திரும்பிவந்து கஅபாவைச் சுற்றி தவாஃப் வருவதை 'தவாஃபுல் இஃபாளா' என்றும், தவாஃபுஸ் ஸியாரா (சந்திப்புச் சுற்றல்) என்றும் கூறுவர்.

## தவாஃபுல் குதூம்

'வருகைச் சுற்றல்' என்பது இதன் பொருளாகும். ஹாஜிகள் மக்காவை அடைந்ததும் இறையில்லம் கஅபாவை தவாஃப் செய்வது அவசியமாகும். இதற்கு தவாஃபுல் குதூம் (வருகைச் சுற்றல்), தவாஃபுத் தஹிய்யத் (காணிக்கைச் சுற்றல்), தவாஃபுல் லிகாஉ (முதல் சந்திப்புச் சுற்றல்) ஆகிய பெயர்கள் உண்டு.

## தவாஃபுல் வதா

'விடைபெறும் சுற்றல்' என்பது இதன் பொருள். ஹாஜிகள் எல்லாக் கிரியைகளையும் நிறைவு செய்தபின் இறுதியாக ஒரு முறை புனித கஅபாவைச் சுற்றி தவாஃப் வருவதற்கே 'தவாஃபுல் வதா' என்பர்.

## தஜ்ஜால்

அந்தி கிறிஸ்து (Anti Christ). உலக அழிவுக்குமுன் மத்திய கிழக்கு ஆசியாவில் தோன்றவிருக்கும் கண்கட்டு வித்தைகளில் கைதேர்ந்த மகா பொய்யன்; ஒற்றைக் கண்ணன். இவனை இறைத்தூதர் ஈசா (அலை) அவர்கள் வதம் செய்வார்கள். குழப்பவாதியான இவனை 'மஸீஹுத் தஜ்ஜால்' என்பர்.

## தஷஹ்ஹுத்

காண்க: அத்தஹிய்யாத்.

## தஸ்பீஹ்

'சுப்ஹானல்லாஹ்' (இறைவன் அனைத்துக் குறைபாடுகளிலிருந்தும் தூய்மையானவன்) என்று துதித்தல்.

## தஹஜ்ஜுத்

இரவுத் தொழுகை. பின்னிரவு நேரத்தில் நிறைவேற்றப்படும் எட்டு ரக்அத்கள் கொண்ட கூடுதல் தொழுகை. 'தூக்கத்தைக் கைவிடல்' என்பது இதன் சொற்பொருளாகும்.

## தாபிஉ

பின்தொடர்ந்தவர் என்பது இதன் சொற்பொருளாகும். நபித்தோழர்களுக்கு அடுத்த

தலைமுறையில் வாழ்ந்த முஸ்லிம். நபித்தோழர்களைச் சந்தித்தவர். பன்மை: தாபிஊன் (தாபிஉகள்). ஒருவர் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்திருக்காவிடில் அவர் நபியவர்கள் காலத்தில் வாழ்ந்தவராயினும் அவரும் தாபிஉகளில் ஒருவராகவே கருதப்படுவார்.

## தாத்துர் ரிகாஉ

சஊதிய்யாவில் நஜ்த் பகுதியில் உள்ள ஓர் இடம். ஃகத்ஃபான் குலத்தாரான பனூ முஹாரிப், பனூ ஸஅலபா கூட்டத்தாருடன் ஹிஜ்ரீ 7ஆம் ஆண்டு (கி.பி. 628) நடந்த கைபர் போருக்குப் பிறகு இங்கு நடைபெற்ற சண்டையே தாத்துர் ரிகாஉ போர் ஆகும். 'முஹாரிபு கஸ்ஃபா போர்', 'பனூ ஸஅலபா போர்', 'நஜ்த் போர்' போன்ற பெயர்களிலும் இது அறியப்படுகிறது.

## தாயிஃப்

மக்காவுக்குத் தென்கிழக்கே 65 மைல் தொலைவில் அமைந்துள்ள கோடை வாசஸ்தலம்.

## தாலூத்

SAUL. கி.மு. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இஸ்ரவேலர்களின் தலைவர். நபி மூசா (அலை) அவர்களுக்குச் சுமார் 350 ஆண்டுகளுக்குப்பின் வாழ்ந்த அவர் அரசராகவும் இருந்தார்.

## தாவூத் (அலை)

தாவீத் (David - கி.மு. 1010-970). நபி யஅகூப் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் வந்த இறைத்தூதர். அன்னாருக்கு 'ஸபூர்' எனும் வேதத்தை அல்லாஹ் அருளினான். இதையே 'தாவீது சங்கீதம்' (Book of Psalms) என இன்று கருதப்படுகிறது.

## திம்மீ

இஸ்லாமிய அரசின் கீழ் குடிமக்களுக்கான சகல உரிமைகளையும் பெற்று வாழும் முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினர்.

## திர்ஹம்

இது 3.06 கிராம் எடையளவு கொண்ட அக்கால வெள்ளி நாணயம்.

## தீனார்

4.374 கிராம் எடையளவு கொண்ட அக்காலத் தங்க நாணயம்.

## துஆ

'அழைப்பு' என்பது இதன் சொற்பொருளாகும். பிரார்த்தனை மற்றும் வேண்டுதலை இது குறிக்கும்.

### துல்கஅதா

இஸ்லாமிய ஆண்டின் பதினோராவது மாதம்.

### துல்ஹஜ்

இஸ்லாமிய ஆண்டின் பன்னிரண்டாவது மாதம்.

### தூர்

மலை என்பது பொருள். நபி மூசா (அலை) அவர்கள் இறைவனுடன் உரையாடிய இடம். தூர்சீனா - சினாய் மலை (Mount Sinai) ஆகும்.

### தொழுகை அறிவிப்பு (பாங்கு)

தொழுகைக்கு விடுக்கப்படும் அறிவிப்பை இது குறிக்கும். அரபியில் 'அதான்' என்பர். தொழுகை அறிவிப்பாளர் 'முஅத்தின்' எனப்படுவார். பாரசீக மொழியில் 'பாங்க்' என்றால் 'ஒலி' என்பது பொருள். இதையொட்டியே தொழுகை அறிவிப்புக்குத் தமிழ் முஸ்லிம்கள் 'பாங்கு' என்கின்றனர். அதன் ஒலியை 'பாங்கொலி' என்பர்.

### நபி

இறைத்தூதர் (Prophet). இதற்குச் 'செய்தி அறிவிப்பவர்' என்பது சொற்பொருளாகும். இஸ்லாமிய வழக்கில், மக்களுக்கு இறைச்செய்திகளை எடுத்துரைத்து, அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக மனிதர்களிலிருந்தே இறைவனால் நியமிக்கப்படும் இறைத்தூதரை 'நபி' அல்லது 'ரசூல்' என்பர். இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைச் சுருக்கமாக 'நபி (ஸல்)' என்றழைப்பர்.

### நபித்துவம்

நபியெனும் தகுதி அல்லது பொறுப்பு (நுபுவ்வத்).

### நபித்தோழர்கள்

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களில் நபியவர்களை நேரடியாகச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள். அரபி மொழியில் 'ஸஹாபா' எனப்படும் இவர்களைத் தமிழ் முஸ்லிம்கள் 'ஸ்ஹாபாக்கள்' என்றோ 'ஸஹாபிகள்' என்றோ குறிப்பிடுவர்.

### நபிமொழி

ஹதீஸ் (Prophetic Tradition). நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம்.

### நஃபில்

ததவ்வுஉ. கூடுதல், அதிகம், உபரி என்பன இதன் சொற்பொருள்கள் ஆகும்.

கடமையல்லாத, கூடுதலான வணக்க வழிபாடுகளை இச்சொல் குறிக்கும். பன்மை: நவாஃபில்.

## நயவஞ்சகர்கள்

காண்க: முனாஃபிக்

## நஜ்த்

மேட்டு நிலம், உள்நாடு, மேட்டுச் சமவெளி ஆகியன இதன் சொற்பொருள்களாகும். அன்று தென் ஹிஜாஸ் கரையோரப் பகுதிகளிலிருந்து (திஹாமா) இராக் நிலப்பரப்புவரையுள்ள மேட்டுப் பாங்கான பகுதிகளுக்கு நஜ்த் (The Arabian High Land) என்ற பெயர் இருந்தது. பின்னர் நஜ்த் என்பது ரியாத், உனைஸா, புரைதா உள்ளிட்ட அரேபிய நகரங்களைக் கொண்ட சஊதிய்யாவின் மத்திய மாகாணத்திற்குப் பெயராயிற்று.

## நஜாஷீ

நீகஸ் (Negus). அபிசீனிய நாட்டு மன்னர்களின் புனை பெயர். நபிகளாரின் காலத்தில் வாழ்ந்த நஜாஷீயின் இயற்பெயர் அஸ்ஹமா. அன்னார் நபிகளாரை விசுவாசித்ததுடன் மக்கா நகர முஸ்லிம்களுக்கு இக்கட்டான காலத்தில் ஆதரவும் நல்கினார். ஹிஜ்ரீ 9ஆம் ஆண்டு (கி.பி. 631) இறந்தார்.

## நஹ்ர்

அறுத்துப் பலியிடல். குர்பானிப் பிராணிகளை அறுத்துப் பகிர்ந்துண்ணும் துல்ஹஜ் 10ஆவது நாளை 'யவ்முந் நஹ்ர்' (நஹ்ருடைய நாள்) என்பர்.

## நான்கு இமாம்கள்

நபி (ஸல்) அவர்கள் மற்றும் நான்கு கலீஃபாக்களின் காலத்திற்குப் பின்னர் தோன்றிய நான்கு இஸ்லாமியச் சட்ட வல்லுநர்கள். 1. அபூஹனீஃபா நுஅமான் பின் ஸாபித் (ரஹ்); கூஃபா-இராக். (ஹிஜ்ரீ 80-150 கி.பி. 699-767) 2. அபூஅப்தில்லாஹ் மாலிக் பின் அனஸ் (ரஹ்); மதீனா-சஊதி அரேபியா. (ஹிஜ்ரீ 93-179 கி.பி. 712-795) 3. அபூஅப்தில்லாஹ் முஹம்மத் பின் இத்ரீஸ் அஷ்ஷாஃபிஈ (ரஹ்); ஃகஸ்ஸா-பாலஸ்தீனம். (ஹிஜ்ரீ 150-204 கி.பி. 767-820) 4. அபூஅப்தில்லாஹ் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்); பஃக்தாத்-இராக். (ஹிஜ்ரீ 164-241 கி.பி. 781-855)

## நான்கு கலீஃபாக்கள்

நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப்பின் அரபுலகை ஆண்ட நாற்பெரும் ஆட்சித் தலைவர்கள். அவர்களின் பெயர்களும் ஆட்சிக் காலமும் வருமாறு:

1. அபூபக்ர் (ரலி). இயற்பெயர்: அப்துல்லாஹ். பரம்பரை: அப்துல்லாஹ் பின் (அபீகுஹாஃபா) உஸ்மான் பின் ஆமிர் பின் அம்ர் பின் கஅப் பின் சஅத் பின் தைம் பின் முர்ரா பின் கஅப் பின் லுஅய் அல்குறஷீ அத்தமீமீ. தாயார் பெயர்: உம்முல் கைர் சல்மா பின்த் ஸக்ர். ஆட்சிக் காலம்: இரண்டரை ஆண்டுகள். இறப்பு: ஹிஜ்ரீ 13 (கி.பி. 634). வயது: 63.

2. உமர் (ரலி). குறிப்புப் பெயர்: அபூஹஃப்ஸ். பரம்பரை: உமர் பின் அல்கத்தாப் பின் நுஃபைல் பின் அப்தில் உஸ்ஸா பின் ரபாஹ் பின் அப்தில்லாஹ் அல்அதவீ அல்குறஷீ. தாயார்: ஹன்த்தமா பின்த் ஹாஷிம். ஆட்சிக் காலம்: 10 ஆண்டுகள். இறப்பு: ஹிஜ்ரீ 23 (கி.பி. 644). வயது: 63.

3. உஸ்மான் (ரலி). குறிப்புப் பெயர்: அபூஅம்ர்; அல்லது அபூஅப்தில்லாஹ். பரம்பரை: உஸ்மான் பின் அஃப்பான் பின் அபில்ஆஸ் பின் உமய்யா பின் அப்தி ஷம்ஸ் அல்குறஷீ அல்உமவீ. தாயார்: அர்வா பின்த் குர்ஸ். ஆட்சிக் காலம்: 12 ஆண்டுகள். இறப்பு: ஹிஜ்ரீ 35 (கி.பி. 655). வயது: 82.

4. அலீ (ரலி). குறிப்புப் பெயர்: அபுல்ஹசன். பரம்பரை: அலீ பின் அபீதாலிப் பின் அப்தில் முத்தலிப் பின் ஹாஷிம் பின் அப்தி மனாஃப் அல்குறஷீ அல்ஹாஷிமீ. தாயார்: ஃபாத்திமா பின்த் அசத் (ரலி). ஆட்சிக் காலம்: நான்கு வருடம் எட்டரை மாதங்கள். இறப்பு: ஹிஜ்ரீ 40 (கி.பி. 660). வயது: 63.

## நிய்யத்

மனதில் எண்ணம் கொள்ளல். தொழுகை நிய்யத்: தொழப்போகிறேன் என எண்ணுதல். நோன்பு நிய்யத்: நோன்பு நோற்பதாக எண்ணுதல்.

## நூஹ் (அலை)

நோவா. முக்கியமான இறைத்தூதர். நபி ஆதம் (அலை) அவர்களுக்குப்பின் வந்த அன்னார் 950 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அவர்களது காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பிரளயத்தை வரலாறு பேசும்.

## நைல் (நீல்)

ஆப்பிரிக்காவில் உள்ளதும் உலகிலேயே மிக நீளமானதுமான நதியின் பெயர். 6,700 கி.மீ. தூரத்தில் பாயும் இந்த நதி எகிப்து, சூடான், எத்தியோப்பியா, உகாண்டா, ஜாயிர், கினியா, புரோண்டி, ரவாண்டா, தான்சானியா ஆகிய ஒன்பது நாடுகள் வழியாகப் பாய்கிறது.

## நோன்புப் பெருநாள் தர்மம்

'ஸதகத்துல் ஃபித்ர்'. நோன்புப் பெருநாள் தினத்தை முன்னிட்டு அன்றைய செலவுகள்

போக கையிருப்பில் உள்ள உணவு தானியங்களில் ஒரு 'ஸாஉ' அளவையோ, அல்லது அதற்குரிய விலையையோ குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் தனித்தனியாகக் கணக்கிட்டு ஏழைகளுக்கு வழங்க வேண்டும். இந்தக் கட்டாய தர்மமே 'ஸதகத்துல் ஃபித்ர்' ஆகும். 'ஸகாத்துல் ஃபித்ர்' என்றும் இதைக் குறிப்பிடுவர்.

### பத்ர்

மக்கா-மதீனா இடையே உள்ள ஓர் இடம். மதீனாவுக்குத் தென்மேற்கே 147 கி.மீ. தொலைவில் உள்ள இந்த இடத்தில் மக்கா இறைமறுப்பாளர்களுக்கும் மதீனா முஸ்லிம்களுக்கும் இடையே ஹிஜ்ரீ 2 (கி.பி. 624) ரமளான் திங்கள் 17ஆவது நாள் வெள்ளிக்கிழமை நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க அறப்போரே 'பத்ர் போர்' எனப்படுகிறது.

### பத்ஹா

மக்காவிற்கும் மினாவுக்கும் இடையிலுள்ள ஒரு சமவெளியின் பெயர். இதற்கு 'அப்த்தஹ்' எனும் பெயரும் உண்டு. இது மக்காவின் 'அல்முஅல்லா' மையவாடிக்கும் 'அல்முஹஸ்ஸப்' எனும் இடத்திற்கும் அருகில் அமைந்துள்ளது. பொதுவாகக் குடியிருப்புகளற்ற சிறு கற்கள் நிறைந்த விசாலமான திறந்தவெளிக்கே 'பத்ஹா' என்று பெயர். சில வேளைகளில் மக்கா நகரையும் 'அல்பத்ஹா' என்பர்.

### ஃபய்உ

எதிரி நாட்டுடன் போர் ஏதும் நடக்காமல் சமாதான அடிப்படையில் அந்நாடு வெற்றி கொள்ளப்படும்பட்சத்தில் கிடைக்கப்பெறும் செல்வம். இதில் போர்வீரர்களுக்குப் பங்கு ஏதும் கிடையாது. ஆட்சியாளரின் பொறுப்பில் இது சிறப்பு நிதியாக இருந்துவரும்.

### பர்தா (ஹிஜாப்)

அந்நிய ஆடவர்கள் பார்க்காத வகையில் பெண்கள் தங்கள் முகம், கைகள், பாதங்கள் தவிர இதர உடலுறுப்புகள் முழுவதையும் துணியால் மறைத்துக்கொள்ளல்.

### ஃபர்ள்

ஃபரீளத். கட்டாயக் கடமை என்பது இதன் பொருள். (உம்:) ஒரு நாளில் ஐவேளை இறைவனைத் தொழுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் ஃபர்ள் ஆகும்.

### ஃபரக்

சுமார் 7.425 கி.கிராம் எடையுள்ள அரபியரின் பழைய அளவை.

### ஃபர்சக்

5.244 கிலோ மீட்டர் கொண்ட தொலைதூரம்.

### பரக்கத்

சுபிட்சம்; செழிப்பு; அருள்வளம்; வளர்ச்சி; மேம்பாடு; அபிவிருத்தி; வளமை; சமுதாய நலன் ஆகிய பொருள்கள் இதற்கு உண்டு. கல்வி, செல்வம், ஆற்றல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இறைவன் அருளும் மேம்பாட்டை இச்சொல் குறிக்கிறது.

### பனூ இஸ்ராயீல்

இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள்; இஸ்ரவேலர்கள். இறைத்தூதர் யஅகூப் (அலை) (Jocob) அவர்களுக்கு 'இஸ்ராயீல்' என்ற பெயரும் உண்டு. அன்னாரின் சந்ததிகள் பனூ இஸ்ராயீல் (இஸ்ராயீலின் மக்கள், இஸ்ரவேலர்கள்) என அழைக்கப்படுகின்றனர். கிறிஸ்துவின் பிறப்புக்குமுன் ஒரே இனத்தாராய் இருந்த இவர்கள், பிறகு யூதர்கள் என்றும் கிறித்தவர்கள் என்றும் பிரிந்துவிட்டனர்.

### ஃபஜ்ர்

வைகறைத் தொழுகை. காண்க: சுப்ஹ.

### பஸ்ரா

இராக்கிலுள்ள ஒரு பெரிய நகரம். உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் (கி.பி.636) இந்நகரம் நிர்மாணிக்கப்பட்டது.

### பஹ்ரைன்

சஊதிக்குக் கிழக்கே பாரசீக வளைகுடாவில் அமைந்துள்ள அரபு நாடு. இதன் தலைநகர் மனாமா.

### பாங்கு

காண்க: தொழுகை அறிவிப்பு.

### ஃபாத்திஹா (அல்ஃபாத்திஹா)

ஆரம்பம், தோற்றுவாய் என்பது இதன் சொற்பொருளாகும். குர்ஆனின் ஆரம்ப அத்தியாயமாகவும் தொழுகையில் ஆரம்பமாக ஓத வேண்டிய அத்தியாயமாகவும் இது அமைந்துள்ளது. இதையே வழக்கில் 'அல்ஹம்து சூரா' என்பர். இதற்கு 'உம்முல் கிதாப்' (குர்ஆனின் அன்னை) எனும் பெயரும் உண்டு.

## ஃபிர்அவ்ன்

பார்வோன் (Pharaoh). அமாலிக்கா (அமலேக்கிய) அரசப் பரம்பரையில் வந்த 11 எகிப்து நாட்டு அரசர்களின் புனை பெயர். இறைத்தூதர் மூசா (அலை) அவர்களது காலத்தில் சர்வாதிகாரியாக இருந்த ஃபிர்அவ்னின் இயற்பெயர் வலீத் பின் முஸ்அப் பின் அர்ரய்யான் என்பதாகும். கிப்தீ (Coptic) குலத்தில் பிறந்த இவன் கி.மு. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தான். இஸ்ரவேலர்களைக் கொத்தடிமைகளாக நடத்திவந்தான். வரலாற்றாசிரியர்கள் இவனை இரண்டாம் ரம்சேஸ் (Ramses II) என்று குறிப்பிடுகின்றனர். இறைவனுக்கும் இறைத்தூதர் மூசா (அலை) அவர்களுக்கும் எதிராகச் செயல்பட்ட இவன் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டுச் செத்தான். இவனுடைய உடல் பாதுகாக்கப்பட்டு, இன்றும் கெய்ரோவிலுள்ள எகிப்து அருங்காட்சியகத்தில் ராயல் மம்மி அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## ஃபிர்தவ்ஸ்

தோட்டம், பூங்கா, சோலை ஆகிய பொருள்கள் உண்டு. சொர்க்கத்திலுள்ள தோட்டம் ஒன்றுக்கு ஃபிர்தவ்ஸ் என்று பெயர். 'அல்ஃபிர்தவ்ஸுல் அஃலா' என்றால் உயர்ந்த சொர்க்கம் என்று பொருள்.

## பின்த்

இப்னத். இதற்கு 'புதல்வி' என்பது பொருள். காண்க: அபூ.

## புஆஸ்

மதீனாவிலிருந்து 3.5 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் இடம். ஹிஜ்ரத்திற்கு 5 ஆண்டுகளுக்குமுன் மதீனாவாசிகளான அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் குலத்தாரிடையே இங்கு நடைபெற்ற (உள்நாட்டுச்) சண்டையே 'புஆஸ் போர்' எனப்படுகிறது.

## புராக்

அளவில் கோவேறுக் கழுதையைவிடச் சிறியதும் கழுதையைவிடப் பெரியதுமான வெள்ளை நிறத்தில் அமைந்த (மின்னல் வேக) பறக்கும் வாகனம். இது பார்வை எட்டுகிற தூரத்திற்கு ஓர் எட்டு வைக்கும் அபார ஆற்றல் கொண்டது. இதில்தான் நபி (ஸல்) அவர்கள் மிஅராஜ் எனும் விண்ணுலகப் பயணம் மேற்கொண்டார்கள்.

## பெருந்துடக்கு

ஜனாபத். உடலுறவு கொண்டாலோ ஸ்கலிதம் ஏற்பட்டாலோ குளியல் கடமையாகும். அவ்வாறே மாதவிடாய், பிரசவ இரத்தப்போக்கு நின்ற பின்னரும் குளியல் கடமையாகும். குளியல் கடமையான இந்நிலைக்கே பெருந்துடக்கு (ஜனாபத்) என்பர்.

## பைஅத்துர் ரிள்வான்

இறைவனுக்கு விருப்பமான உறுதிப் பிரமாணம். நபி (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் ஹிஜ்ரீ 6ஆம் ஆண்டு (கி.பி. 627) உம்ரா பயணம் மேற்கொண்டபோது மக்காவுக்குள் நுழைய விடாமல் மக்காவாசிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் முஸ்லிம்கள்மீது தாக்குதல் தொடுக்கப்போவதாக செய்தி எட்டியபோது, நபித்தோழர்கள், 'பின்வாங்கமாட்டோம்; உயிரைத் தத்தம் செய்வோம்' எனச் சூளுரைத்தனர். ஒரு கருவேல மரத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்ச்சியையே 'பைஅத்துர் ரிள்வான்' என்பர்.

## பைத்துல் மஃமூர்

'நிர்மாணிக்கப்பெற்ற இல்லம்' என்பது சொற்பொருள். 'வானவர்கள் அதிகம் சஞ்சரிக்கும் இறையில்லம்' என்பது கருத்து. இது வானில் அமைந்துள்ள இறையில்லமாகும். நபி (ஸல்) அவர்கள் தமது விண்ணுலகப் பயணத்தில் இதைக் கண்டு வியந்தார்கள். இதன் உண்மை நிலையை இறைவனே அறிவான்.

## பைத்துல் மக்திஸ்

பைத்துல் முகத்தஸ். ஜெரூசலத்திலுள்ள புனிதப் பள்ளிவாசல். இதற்குத் 'தூய்மை இல்லம்' என்பது பொருள். 'அல்மஸ்ஜிதுல் அக்ஸா' (கோடியிலுள்ள பள்ளிவாசல்) என்றும் இதை அழைப்பர். வேதக்காரர்கள் இதை 'ஹைக்கல்' என்பர். இது முஸ்லிம்களின் மூன்றாவது புனிதப் பள்ளிவாசல் ஆகும். ஜெரூசலத்திற்கே 'பைத்துல் மக்திஸ்' அல்லது 'அல்குத்ஸ்' என்று கூறுவதும் உண்டு

## பைத்துல் ஹராம்

கண்ணியமிக்க இறையில்லம். காண்க: மஸ்ஜிதுல் ஹராம்.

## மக்கா

மக்கத்துல் முகர்ரமா (திரு மக்கா). சஊதிய்யாவிலுள்ள புனித நகரம். ஏக இறைவனை வணங்குவதற்காக உலகில் நிர்மாணிக்கப்பெற்ற முதல் இறைஆலயமான கஅபா இங்குதான் அமைந்துள்ளது. உலகின் இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்த ஊரில்தான் பிறந்தார்கள். உலக முஸ்லிம்கள் இங்கு சென்றுதான் புனித கஅபாவைத் தரிசித்து தமது புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுகிறார்கள். இதற்கு 'பக்கா', 'அல்பலதுல் அமீன்', 'அல்பல்தா', 'உம்முல் குரா', 'அல்பைத்துல் அத்தீக்', 'அல்பைத்துல் ஹராம்', 'அல்பலதுல் அமீன்' ஆகிய பெயர்களும் உண்டு.

## மக்கா வெற்றி

ஃபத்ஹு மக்கா. ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு (கி.பி.630) ரமளான் மாதம் நபி (ஸல்)

அவர்கள் 12,000 முஸ்லிம்களுடன் சென்று தமது பிறந்தகமான மக்காவைக் கத்தியின்றி யுத்தமின்றி வெற்றி கொண்ட நிகழ்ச்சி.

**மக்கீ**

மக்காவைச் சேர்ந்தது; மக்காவைச் சேர்ந்தவர் என்பன இதன் சொற்பொருள்களாகும். நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து (ஹிஜ்ரத்) செல்வதற்குமுன் அருளப்பெற்ற திருக்குர்ஆன் அத்தியாயங்களுக்கு 'மக்கீ அத்தியாயம்' என்பர். மக்கீ அத்தியாயங்கள் 86 ஆகும்.

**மஃக்ரிப்**

சூரியன் மறைதல், மேற்குத் திசை என்பன சொற்பொருள்களாகும். சூரியன் மறைந்தபின் தொழப்படும் கடமையான தொழுகை 'மஃக்ரிப் தொழுகை' எனப்படுகிறது.

**மகாமு இப்ராஹீம்**

இப்ராஹீம் நின்ற இடம் என்பது பொருள். நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் அவர்களுடைய புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களும் கஅபாவின் அடித்தளத்தை உயர்த்திக் கட்டி அதைப் புதுப்பித்தபோது, இப்ராஹீம் (அலை) அவர்கள் எந்த இடத்தில் நின்றுகொண்டு கஅபாவைக் கட்டினார்களோ அந்த இடத்தின் பெயர்.

**மசீஹ்**

(அ) இதற்குத் தடவுகின்றவர், தடவப்பட்டவர், பயணிப்பவர் முதலிய பொருள்கள் உண்டு. இது நபி ஈசா (அலை) அவர்களின் சிறப்புப் பெயராகும். இறையுதவியால் தமது கரம் கொண்டு நோயாளிகளைத் தொட்டுத் தடவி குணப்படுத்தியதால் இறைத்தூதர் ஈசா (அலை) அவர்களை 'மசீஹ்' (தடவுகின்றவர்) என்பர். கிறித்தவர்களை 'மசீஹிய்யூன்' என்பர்.

(ஆ) உலக முடிவு நாளுக்குமுன் உலகெங்கும் சுற்றித் திரிபவனான மகா பொய்யன் தஜ்ஜாலுக்கும் 'மசீஹ்' எனும் பெயர் உண்டு. இவனது ஒரு கண் தடவப்பட்டு (இல்லாமல்) ஆக்கப்பட்டிருக்கும். இவனது கதையை நபி ஈசா (அலை) அவர்களே முடிப்பார்கள்.

**மத்ஹப்**

'சென்ற வழி' என்பது சொற்பொருள். இஸ்லாத்தின் மூல ஆதாரங்களாகிய குர்ஆன், ஹதீஸிலிருந்தும், அவ்விரண்டுக்கும் மாறுபடாத நபித்தோழர்களின் கூற்றுகளிலிருந்தும் சட்ட அறிஞர்கள் (இமாம்கள்) கண்டறிந்த சட்ட முடிவுகளே 'மத்ஹப்' எனப்படும். (உம்:) இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கண்டறிந்த சட்ட

முடிவுகளுக்கு 'ஷாஃபிஈ மத்ஹப்' என்பர்.

### மதனீ

மதீனாவைச் சேர்ந்தது; மதீனாவைச் சேர்ந்தவர் என்பது பொருள். நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து (ஹிஜ்ரத்) சென்ற பின்னர் அருளப்பெற்ற திருக்குர்ஆன் அத்தியாயங்களுக்கு 'மதனீ அத்தியாயம்' என்பர். மதனீ அத்தியாயங்கள் 28 ஆகும்.

### மதீ

பாலுணர்வுக் கிளர்ச்சி நீர். பாலுணர்வு ஏற்படும்போது பிறப்பு உறுப்பிலிருந்து வெளிவரும் பிசுபிசுப்பான இளகிய நீருக்கே மதீ (மத்யுன்) என்பர். இது அசுத்தமாகும். இதற்காகக் குளிக்க வேண்டியதில்லை. கழுவி அங்கத் தூய்மை செய்துகொள்ள வேண்டும். விந்து வெளிப்பட்டால்தான் குளியல் கடமையாகும்.

### மதீனா

மதீனத்துல் முனவ்வரா. சஊதிய்யாவிலுள்ள இரண்டாவது புனித நகரம். நபி (ஸல்) அவர்களும் மக்கா முஸ்லிம்களும் புலம்பெயர்ந்து சென்று குடியேறிய நகரம். ஆரம்பத்தில் 'யஸ்ரிப்' எனப் பெயர் பெற்றிருந்த இந்நகரம் நபிகளாரின் வருகைக்குப் பின்னர் மதீனத்துந் நபீ (நபிகளாரின் நகரம்) என்று பெயர் பெற்று விளங்கியது. இந்நகரத்தில் நபி (ஸல்) அவர்கள் பத்தாண்டுகள் வசித்தார்கள். இங்குதான் அவர்களின் அடக்கத் தலமும் உள்ளது. இரண்டாவது புனித இறையில்லமான மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசல் இங்குதான் அமைந்துள்ளது.

### மர்யம் (அலை)

அன்னை மேரி. இம்ரான் - ஹன்னா தம்பதியரின் மகளான இவர், ஆண் துணையின்றி அற்புதமான முறையில் (இயேசு எனப்படும்) இறைத்தூதர் ஈசா (அலை) அவர்களைப் பெற்றெடுத்த கன்னித் தாய் ஆவார். இறுதிவரை மணமுடித்துக்கொள்ளாத அன்னை மர்யம் (அலை) அவர்கள் ஆரம்பக் கட்டத்தில் இறைத்தூதர் ஸகரிய்யா (அலை) அவர்களின் பராமரிப்பில் வளர்ந்தார்கள்.

### மர்வா

மக்காவில் கஅபாவுக்கு அருகே அமைந்துள்ள ஒரு சிறிய மலைக் குன்று.

### மழைத் தொழுகை

ஸலாத்துல் இஸ்த்திஸ்கா. மழை பொழிவிக்குமாறு இறைவனிடம் வேண்டும் பொருட்டு, கூட்டாக நிறைவேற்றப்படும் இரண்டு ரக்அத்கள் கொண்ட ஒரு சிறப்புத் தொழுகை.

### மனாத்

அறியாமைக் காலத்தில் வழிபாடு செய்யப்பட்டுவந்த சிலைகளில் ஒன்று. காண்க: உஸ்ஸா

### மஜூசி

அக்னி ஆராதனையாளர் (Magian). நெருப்பை வணங்கிய பண்டைய பாரசீக புரோகிதர்களில் ஒருவரான 'மின்ஜ்கூஷ்' என்பாரே மஜூஸ் ஆவார். அவருடைய கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் மஜூசிகள் என்றழைக்கப்பட்டனர். ஒளியும் இருளுமே அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படை; நல்லவை ஒளியிலிருந்தும் தீயவை இருளிலிருந்தும் உருவாகின்றன என்பது இவர்களின் முக்கியக் கொள்கை. மின்ஜ்கூஷ் எனும் வார்த்தை அரபியாக்கப்பட்டு மஜூஸ் என்றானது.

### மஸ்ஜித்

பள்ளிவாசல் (Mosque). சிரவணக்கம் செய்யுமிடம் என்பது இதன் சொற்பொருளாகும். பன்மை: மஸாஜித்.

### மஸ்ஜிதுல் அக்ஸா

காண்க: பைத்துல் மக்திஸ்.

### மஸ்ஜிதுந் நபவீ

மதீனாவிலுள்ள புனிதப் பள்ளிவாசல். இதை நபி (ஸல்) அவர்கள் கட்டியதால் இது மஸ்ஜிதுந் நபவீ (நபிகளாரின் பள்ளிவாசல்) என அழைக்கப்படுகின்றது. இது இரண்டாவது புனிதப் பள்ளிவாசல் ஆகும்.

### மஸ்ஜிதுல் ஹராம்

கஅபாவை உள்ளடக்கிய இறையில்லத்தை 'மஸ்ஜிதுல் ஹராம்' (புனித இறையில்லம்) என்று கூறுவர். இது முதலாவது புனிதப் பள்ளிவாசல் ஆகும். இதை 'பைத்துல் ஹராம்' என்றும் அழைப்பர்.

### மஸ்ஹ்

தடவுதல் என்பது பொருள். அங்கத் தூய்மை (உளூ) செய்யும்போது நனைந்த கைகளால் தலையைத் தடவுவதற்கும், கழுவ முடியாத உறுப்புகளை நீர் தொட்டுத் துடைப்பதற்கும் மஸ்ஹ் என்பர்.

### மஹ்ர்

மணக் கொடை. ஈடு, பதில் என்பது இதன் சொற்பொருளாகும். மணம்

புரிந்துகொள்வதற்காக மணாளர் தம் மணாளிக்கு வழங்க வேண்டிய தொகை; விவாகக் கொடை.

## மஹ்ஷர்

ஒன்றுகூட்டப்படும் இடம்; காலம். உலகில் தோன்றிய எல்லா மனிதர்களும் உலகம் அழிந்தபின் (மறுபடியும்) உயிரூட்டப்பட்டு ஒன்றுகூட்டப்படும் நாளையே 'யவ்முல் ஹஷ்ர்' என்றும் 'மஹ்ஷர்' என்றும் கூறுவர். ஒன்றுகூட்டப்படும் இடத்தை 'மஹ்ஷர் பெருவெளி' என்பர்.

## மிஅராஜ்

இதற்கு ஏறும் கருவி (ஏணி) என்பது பொருள். நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்திற்கு ஓர் ஆண்டுக்குமுன் (கி.பி. 621) ஜெரூசலத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலிலிருந்து விண்ணுலகப் பயணம் மேற்கொண்டார்கள். இப்பயணத்திற்கே மிஅராஜ் என்பர். இறையாணைப்படி நடந்த இப்பயணத்தின் போதுதான் ஐவேளைத் தொழுகையை இறைவன் கடமையாக்கினான்.

## மிம்பர்

சொற்பொழிவு மேடை. ஏறி நின்று சொற்பொழிவாற்றுவதற்காகப் பள்ளிவாசலில் இமாம் நின்று தொழுவிக்கும் இடத்திற்கு அருகில் இது அமைக்கப்பட்டிருக்கும்.

## மினா

மக்காவுக்கும் அரஃபாவுக்கும் இடையிலுள்ள ஓர் இடம். மக்காவிலிருந்து சுமார் 9 கி.மீ. தொலைவிலும், அரஃபாவிலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவிலும் இது உள்ளது. ஹஜ் பருவத்தில் இங்கு தங்க வேண்டிய (துல்ஹஜ் 11, 12, 13, ஆகிய மூன்று) நாட்களை 'மினாவுடைய இரவுகள்' என்பர்.

## மிஹ்ராப்

பள்ளிவாசலின் மையப் பகுதியில் இமாம் நின்று தொழுகை நடத்தும் இடம். கிப்லா திசைக்கும் மிஹ்ராப் எனப்படுவதுண்டு.

## மீக்காயீல்

முக்கியமான வானவர்களில் ஒருவர். சில நேரங்களில் இறையறிவிப்பை (வஹீயை) இறைத்தூதர்களுக்குத் தெரிவிக்கும் பணியைச் செய்துள்ளார்கள்.

## முஅத்தின்

தொழுகை அறிவிப்பாளர். காண்க: தொழுகை அறிவிப்பு.

## முஅதஸிலா

இஸ்லாத்தில் மாறுபட்ட சிந்தனைகளை வெளியிட்ட ஒரு பிரிவினர். வாஸில் பின் அதாஉ என்பவரே அவர்களின் தலைவராக விளங்கினார். ஹசன் அல்பஸ்ரீ (ரஹ்) அவர்களின் மாணவராயிருந்த அவர் பின்னர் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்து அன்னாரின் அவையிலிருந்து விலகிச் சென்றார். இதையொட்டி அவர் 'விலகிச் சென்றவர்' (முஅதஸிலீ) என அறியப்பட்டார். அவருடைய ஆதரவாளர்கள் 'முஅதஸிலாக்கள்' எனப்பட்டனர். முஸ்லிம்களில் பாவம் இழைப்போர் இஸ்லாத்திலிருந்து வெளியேறிவிடுவர் என்பது இவர்களின் தவறான கொள்கைகளில் ஒன்றாகும்.

## முசைலிமா

நபி (ஸல்) அவர்களின் இறுதிக் காலத்தில் (கி.பி. 633) யமாமா பகுதியில் வாழ்ந்த ஒரு மகா பொய்யரின் பெயர். இவர் தம்மை இறைத்தூதரென வாதிட்டுவந்தார். முதலாம் கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் (ஹிஜ்ரீ 14ஆவது ஆண்டில்) வடக்கு யமாமாவிலுள்ள அக்ரபா (ஹதீக்கத்துல் மவ்த்) எனும் களத்தில் நடந்த யமாமா போரில் நபித்தோழர் வஹ்ஷீ (ரலி) என்பவரால் இவர் கொல்லப்பட்டார்.

## முத்ஆ

(1) முத்அத்துல் ஹஜ் (காண்க: தமத்துஉ)

(2) தவணை முறைத் திருமணம் (முத்அத்துந் நிசா): ஒரு குறிப்பிட்ட தவணை நிர்ணயித்து ஒரு பெண்ணை மணமுடித்துக்கொள்வது. தொடக்கத்தில் நடைமுறையில் இருந்துவந்த இத்திருமண முறை பின்னர் முற்றிலும் தடை செய்யப்பட்டுவிட்டது.

(3) வாழ்க்கை வசதி அல்லது உதவிப் பொருள்: பொதுவாக மணவிலக்கு அளிக்கப்பட்ட பெண்ணுக்குக் கணவர் தமது வசதிக்குத் தக்கவாறு வழங்க வேண்டிய ஜீவனாம்சம்.

## முத்தஷாபிஹ்

'ஒன்றுக்கு ஒன்று ஒப்பானவை'; 'உருவத்தில் ஒன்றுபட்டு சுவையில் வேறுபட்டவை' என்ற பொருள்கள் இதற்கு உண்டு. குர்ஆனில் பல பொருள்களுக்கு இடமளிக்கக் கூடிய வசனங்களும் உண்டு. இன்னதுதான் இதற்குப் பொருள் என அறுதியிட்டுச் சொல்லவியலாத இத்தகைய வசனங்களைப் பொதுவாக 'முத்தஷாபிஹ்' என்பர்.

## 'முத்'து

மதீனா நகரில் நடைமுறையில் இருந்துவந்த சுமார் 533 கிராம் எடையளவு கொண்ட ஓர் அளவு.

**முஃபஸ்ஸல்**

பிரிக்கப்பட்டது; விவரிக்கப்பட்டது என்பன சொற்பொருள்கள். குர்ஆனில் அல்ஹுஜுராத் எனும் 49ஆவது அத்தியாயம் முதல் இறுதிவரையிலான ஓரளவு சிறிய வசனங்களைக் கொண்ட அத்தியாயங்கள் அடங்கிய பகுதிக்கே 'முஃபஸ்ஸல்' என்பர்.

**முனாஃபிக்**

நயவஞ்சகர்; போலி விசுவாசி. வெளித்தோற்றத்தில் தம்மை இறைநம்பிக்கையாளரைப் போன்று காட்டிக்கொண்டு உள்ளே இறைமறுப்பைக் கொள்கையாகக் கொண்டிருப்பவர். பன்மை: முனாஃபிகூன். நபி (ஸல்) அவர்களது காலத்தில் இத்தகைய நயவஞ்சகர்கள் இருந்துகொண்டு முஸ்லிம்களுக்குப் பல்வேறு தீமைகள் செய்துவந்தனர். பொய், துரோகம், கெட்ட பேச்சுகள் பேசுதல் போன்ற தீய பண்புகள் நயவஞ்சகர்களின் குணங்களாகும்.

**முஸ்தலிஃபா**

அரஃபாவுக்கும் மினாவுக்கும் இடையில் உள்ள ஒரு திறந்தவெளி. ஹாஜிகள் அரஃபாவிலிருந்து திரும்பிய பின்னர் இங்கு தங்குவர். இதுவும் ஹஜ்ஜின் கிரியைகளில் ஒன்றாகும்.

**முஸ்லிம்**

சாந்தியளிப்பவர், கீழ்ப்படிகின்றவர் என்பது இதன் சொற்பொருள். இறைநம்பிக்கை கொண்டு இறைச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்றவர். இறை வழிபாடுகளைச் சரிவரச் செய்துவருகின்றவர்.

**முஸாஃபஹா**

கரம் பற்றல். ஒருவரையொருவர் சந்திக்கும்போது கரம் பற்றி வாழ்த்தி வரவேற்பதை முஸாஃபஹா என்பர். இதை யமன்வாசிகளே அரபியருக்கு அறிமுகப்படுத்தினர்.

**முஹம்மத்**

இறைவனின் இறுதித் தூதரான நபி (ஸல்) அவர்களுடைய பெயர். புகழப்பட்டவர் என்பது இதன் பொருள். இவர்கள் கி.பி. 570 ஆகஸ்ட் மாதம் 20ஆம் நாள் மக்காவில் பிறந்தார்கள்.

**முஹர்ரம்**

இஸ்லாமிய ஆண்டின் முதல் மாதம்.

## முஹாஜிர்

'துறந்தவர்' என்பது இதன் சொற்பொருளாகும். இஸ்லாமிய வரலாற்றில், மக்காவிலிருந்து புலம்பெயர்ந்து மதீனாவிற்கு (ஹிஜ்ரத்) சென்ற முஸ்லிம்களை 'முஹாஜிர்கள்' என்பர்.

## மூசா (அலை)

மோசே (Moses). இறைத்தூதர்களில் ஒருவரான இவர்கள் கி.மு. 13ஆம் நூற்றாண்டில் எகிப்தில் பிறந்தார்கள். கொடுங்கோலன் இரண்டாம் ரம்சேஸால் கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட இஸ்ரவேலர்களை மீட்டார்கள். இவர்களுக்கு இறைவன் தவ்ராத் (தோரா) எனும் வேதத்தை அருளினான்.

## மூத்தா போர்

ஜோர்டான் நாட்டில் 'அல்கரத்' நகருக்குத் தெற்கே அமைந்துள்ள ஓர் இடமே 'மூத்தா' ஆகும். இது அன்றைய ஷாம் (சிரியா) நாட்டின் 'அல்பல்கா' நகருக்கு அருகில் அமைந்திருந்தது. இங்கு ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு (கி.பி. 629) கிழக்கு ரோமானியருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டையே 'மூத்தா போர்' எனப்படுகிறது.

## யஅகூப் (அலை)

யாக்கோபு - Jocob. கி.மு. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர்கள் நபி இஸ்ஹாக் (அலை) அவர்களின் புதல்வரும் இறைத்தூதர்களில் ஒருவரும் ஆவார்கள். அன்னாருக்கு 12 ஆண்பிள்ளைகள் இருந்தனர். இந்தப் பன்னிருவரின் வழித்தோன்றல்களே இஸ்ரவேல் சமுதாயத்தார் (jews) ஆவர். யஅகூப் (அலை) அவர்களின் மற்றொரு பெயரே இஸ்ராயீல். இதனால்தான் இஸ்ரவேலர்களை 'பனூ இஸ்ராயீல்' (இஸ்ராயீலின் மக்கள்-இஸ்ரவேலர்கள்) என்பர்.

## யஃஜூஜ், மஃஜூஜ்

வடகிழக்கு ஆசியாவில் வாழ்ந்த ஒரு சமூகத்தாரின் பெயர். இவர்கள் வளமிக்க நாடுகளைக் கொள்ளையடித்து வாழ்ந்துவந்தனர். கருங்கடலின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வசித்துவந்த சித்தியன் (Sythians) சமூகத்தாரே இவர்கள் என்பர் சிலர். மாஸ்கோ உள்ளிட்ட ரஷியப் பகுதிகளிலும் இவர்கள் வாழ்ந்துள்ளனர்.

## யமன்

ஏமன். சஊதி அரேபியாவுக்கும், ஓமனுக்கும், ஏடன் வளைகுடாவுக்கும், செங்கடலுக்கும் மத்தியில் அமைந்துள்ள அரேபிய தீபகற்பத்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ள அரபு நாடு.

**யமாமா**

மக்கா நகரிலிருந்து அன்றைய 4 நாள் பயணத் தொலைவில் அமைந்த ஓர் இடம். அன்று யமன் நகரமாக இருந்த யமாமா இன்று சஊதியில் ஒரு பாலை இடைச் சோலை (oasis) ஆகும். தம்மை நபியென வாதிட்ட மகா பொய்யர் முஸைலிமாவுடன் கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களது ஆட்சியில் இங்கு நடைபெற்ற போரே 'யமாமா போர்' எனப்படுகிறது.

**யர்மூக்**

ஜோர்டானிலுள்ள ஒரு கால்வாயின் பெயர். ஹிஜ்ரீ 15ஆம் ஆண்டில் (கி.பி. 636) இரண்டாம் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் ஆட்சிக் காலத்தில் கிழக்கு ரோமானியருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டையே 'யர்மூக் போர்' எனப்படுகிறது.

**யவ்முத் தர்வியா**

'தண்ணீர் சேமிக்கும் நாள்' என்பது இதன் சொற்பொருளாகும். துல்ஹஜ் மாதத்தின் எட்டாவது நாளை இது குறிக்கும். அன்றைய ஹஜ் யாத்ரீகர்கள் அந்நாளில் தண்ணீர் நிறைத்துக்கொள்வர் என்பதால் இந்நாளுக்கு இப்பெயர் வரலாயிற்று.

**யவ்முந் நஃப்ர்**

'புறப்படும் நாள்' என்பது இதன் பொருள். துல்ஹஜ் 12 அல்லது 13ஆவது நாள் ஹாஜிகள் மினாவில் செய்ய வேண்டிய கிரியைகளை நிறைவேற்றிவிட்டுப் புறப்படும் நாள்.

**யவ்முந் நஹ்ர்**

'பலியிடும் நாள்' என்பது இதன் பொருள். துல்ஹஜ் மாதத்தின் பத்தாவது நாளை இது குறிக்கும். இந்நாளில் ஹாஜிகள் ஷைத்தானுக்குக் கல்லெறிந்துவிட்டு வந்து, குர்பானிப் பிராணிகளை அறுத்துப் பலியிடுவர்.

**யஸ்ரிப்**

மதீனா நகரின் பழைய பெயர்.

**யஹ்யா (அலை)**

யோவான். நபி ஸகரிய்யா (அலை) அவர்களின் புதல்வராவார். இறைத்தூதரான இவரை இஸ்ரவேலர்கள் படுகொலை செய்தனர்.

**யூதர்கள்**

(Jews). இறைத்தூதர் யஅகூப் (அலை) அவர்களுக்கு (யாக்கோபு) 12 ஆண்பிள்ளைகள்

இருந்தனர். இந்தப் பன்னிருவரின் வழித்தோன்றல்களான இஸ்ரவேலர்கள் கிறிஸ்துவின் பிறப்புக்குப் பின் இரு பிரிவினராகப் பிரிந்துவிட்டனர். அவர்களில் ஒரு சாராரே யூதர்கள் ஆவர். இன்னொரு சாராரே கிறித்தவர்கள்.

**யூசுஃப் (அலை)**

யோசேப்பு (joseph). நபி யஅகூப் (அலை) அவர்களின் இளைய புதல்வரான இவர்களும் ஓர் இறைத்தூதர் ஆவார்கள். கி.மு. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அன்னார் பேரழகுக்கும் அழகிய வரலாற்றுக்கும் சொந்தக்காரர் ஆவார்கள். நபிமார்கள் பரம்பரையில் பிறந்த பெருமைக்குரிய இவர்கள், எகிப்தின் அமைச்சராக விளங்கினார்கள்.

**யூனுஸ் (அலை)**

யோனா (Jonah - கி.மு. 781-741). இவர்கள் இராக்கிலுள்ள நீனவா' (நினிவே) எனும் ஊரில் வாழ்ந்தார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு இறைத்தூதராக அனுப்பப்பட்டார்கள்.

**யூஷஉ பின் நூன் (அலை)**

இறைத்தூதர் மூசா (அலை) அவர்களது காலத்தில் வாழ்ந்த நல்லடியார். இவர் இறைத்தூதர் மூசா (அலை) அவர்கள் இறந்து 40 வருடங்களுக்குப்பின் நபியாக்கப்பட்டார்கள்.

**ரக்அத்**

தொழுகையில் ஒரு முறை நிற்றல், குனிதல் மற்றும் இரண்டு சஜ்தா (சிரவணக்கம்) செய்தல் ஆகிய நிலைகளை உள்ளடக்கிய ஒரு பகுதி.

**ரசூல்**

இறைத்தூதர். நபி என்பதன் மற்றொரு பெயர். வழக்கில் முக்கியமான இறைத்தூதர்களை ரசூல்மார்கள் என்பர்.

**ரமல்**

கால் எட்டுகளை அகல விரிக்காமல், அருகருகே வைத்து விரைந்து நடப்பது. அவ்வாறு நடக்கும்போது இயல்பாகவே தோள்கள் குலுங்கும். இதற்கே 'ரமல்' என்பர். இதற்கு 'கபப்' என்ற பெயரும் உண்டு. ஹாஜிகள் உம்ராவின் தவாஃபிலும் ஹஜ்ஜின் தவாஃபிலும் ஸஃபா மற்றும் மர்வா இடையே ஓடி (சயீ) வரும்போதும் 'ரமல்' செய்வது நபிவழியாகும்.

**ரமளான்**

ஹிஜ்ரீ ஆண்டின் ஒன்பதாம் மாதம். இம்மாதத்தில்தான் குர்ஆன் ஆரம்பமாக

அருளப்பெற்றது. இதில் உண்ணா நோன்பு நோற்பது கடமையாகும்.

## (ரலி)

'ரலியல்லாஹு அன்ஹு' (அன்னார்மீது அல்லாஹ்வின் அன்பு உண்டாவதாக!) என்பதன் சுருக்கம். இது பெரும்பாலும் நபித்தோழர்களுக்காகச் செய்யப்படும் பிரார்த்தனையாகும்.

## ரளாஉ (ரளாஆ)

'தாய்ப்பால் அருந்துதல்' என்பது இதன் சொற்பொருளாகும். பிறப்பால் ஏற்படும் உறவுமுறைகள் ஒரு பெண்ணிடம் பால் குடிப்பதாலும் ஏற்பட்டுவிடுகிறது. ஒரு பெண்ணிடம் பால் குடித்த குழந்தை பிற்காலத்தில் அப்பெண்ணையோ அவளுடைய கணவரையோ அவளின் பிள்ளைகளையோ மணமுடிப்பது கூடாது. இந்த உறவுமுறைக்கே 'ரளாஉ' என்பர்.

## ரஜப்

இஸ்லாமிய ஆண்டின் ஏழாவது மாதம்.

## (ரஹ்)

'ரஹ்மத்துல்லாஹி அலைஹி' (அல்லாஹ்வின் அருள் அவர்மீது உண்டாவதாக!) என்பதன் சுருக்கம். இறந்துபோன இஸ்லாமியப் பெரியவர்களுக்காக இப்படிப் பிரார்த்திப்பது வழக்கம்.

## ராஃபிளாக்கள்

ராஃபிஸிகள். ஷியாக்களில் ஒரு பிரிவினர். 'கைவிட்டோர்' என்பது இதன் சொற்பொருளாகும். இவர்கள் ஸைத் பின் அலீ (ரஹ்) அவர்களை ஒரு நெருக்கடியான நிலையில் கைவிட்டதால் 'ராஃபிளாக்கள்' என அறியப்படுகின்றனர்.

## ரிஸ்க்

வாழ்வாதாரம். பயனளிக்கும் பொருள், உணவு ஆகியவற்றை இச்சொல் குறிக்கும். உயிரினங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாய்த் திகழும் அறிவு, ஆற்றல், ஆகாரம் போன்ற அனைத்தும் இதில் அடங்கும்.

## ருக்னுல் அஸ்வத்

கறுப்பு மூலை என்பது பொருள். சதுர வடிவில் அமைந்துள்ள இறையில்லம் கஅபாவின் நான்கு மூலைகளில் கஅபாவின் தலைவாயிலை ஒட்டியுள்ள 'ஹஜருல் அஸ்வத்' கல் பதிக்கப்பெற்றுள்ள வடகிழக்கு மூலை. இதற்கு 'ஹஜருல் அஸ்வத் மூலை' என்றும் கூறுவர்.

**ருக்னுல் இராக்கீ**

கஅபாவின் வடமேற்கு மூலை.

**ருக்னுல் யமானீ**

கஅபாவின் தென்கிழக்கு மூலை. ருக்னுல் அஸ்வத் மற்றும் ருக்னுல் யமானீ ஆகிய இரு மூலைகளுக்கும் சேர்த்து 'யமனிய மூலை' என்ற பொதுப் பெயர் உண்டு.

**ருக்னுஷ் ஷாம்**

கஅபாவின் தென்மேற்கு மூலை.

**ருகூஉ**

'குனிதல்' என்பது சொற்பொருள். தொழுகையில் இரு கைகளையும் இரு முழங்கால்கள்மீது வைத்துக் குனிந்து நிற்கும் நிலை.

**ரூஹ்**

ஆத்மா. உயிர். அர்ரூஹ் எனும் சொல் தூய ஆத்மாவான வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களைக் குறிக்கும்.

**லாத்**

அறியாமைக் கால அரபியர் வழிபாடு செய்துவந்த சிலைகளில் ஒன்றின் பெயர். காண்க: உஸ்ஸா.

**லிஆன்**

காண்க: சாப அழைப்புப் பிரமாணம்.

**லுக்மான் (அல்ஹகீம்)**

(lokman) மத்திய கிழக்கு ஆசியாவில் வாழ்ந்த ஒரு தத்துவப் பேரறிவாளர். செங்கடலோரத்தில் 'அய்லா' எனும் பகுதியில் வசித்துவந்த அன்னார், ஓரிறைக் கொள்கையை அழுத்தமாகப் போதிப்பவராகத் திகழ்ந்தார்கள். அன்னாரின் தத்துவங்கள் சிலவற்றைத் திருக்குர்ஆன் எடுத்துரைப்பதே அன்னாரின் சிறப்புக்குப் போதிய சான்றாகும்.

**லுஹ்ர்**

(பகல் தொழுகை). பிற்பகலின் முற்பகுதியிலுள்ள நேரம். இந்நேரத்தில் தொழப்படும் கடமையான தொழுகையே 'லுஹ்ர் தொழுகை' எனப்படுகிறது.

**லூத் (அலை)**

லோத் (lot). இறைத்தூதர்களில் ஒருவர். நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் சகோதரர் மகனான அன்னார் ஜோர்டானிலுள்ள 'சதூம்' என்னும் பகுதிக்கு இறைத்தூதராக நியமிக்கப்பெற்றார்கள். சிலை வழிபாட்டையும் ஒருபால் உறவையும் எதிர்த்துத் தீவிரப் பிரசாரம் செய்தார்கள்.

**லைலத்துல் கத்ர்**

கண்ணியமிக்க இரவு. இந்த இரவில்தான் ஆரம்பமாகத் திருக்குர்ஆன் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பெற்றது. ரமளான் மாதத்தில் கடைசிப் பத்து நாட்களில் உள்ள ஒற்றைப்படை இரவுகளில் ஒன்றே இது.

**ளுஹா**

சூரிய உதயத்திற்கும் நண்பகலுக்கும் இடைப்பட்ட நேரம். முற்பகல். இந்நேரத்தில் நபிகளார் தொழுத எட்டு ரக்அத் தொழுகைக்கு 'ளுஹா தொழுகை' எனப்படுகிறது.

**வக்ஃப்**

அறக்கொடை. ஒருவர் தமது பொருளைத் தம்மிடமே வைத்துக்கொண்டு, அதன் பயன்பாட்டை மட்டும் தர்மம் செய்வது; அல்லது பொருளையே இறைவனுக்காக அர்ப்பணிப்பது.

**வலா**

வாரிசுரிமை. விடுதலை செய்யப்பட்ட ஓர் அடிமை சொத்துகள் சிலவற்றைச் சேர்த்துவிட்டு இறந்துவிடுகிறார். அவருக்கு மூலவாரிசுகளோ கிளை வாரிசுகளோ யாருமில்லை. இந்நிலையில் அவ்வடிமை சேர்த்த சொத்துக்கு, அவரை விடுதலை செய்த உரிமையாளரே வாரிசாவார். இவ்வாறு அடிமையின் சொத்துக்கு வாரிசாகும் உரிமைக்கே 'வலா' என்பர்.

**வலீமா**

திருமணத்தையொட்டி மணாளர் வழங்க வேண்டிய மணவிருந்து. இது மார்க்கத்திலுள்ள ஓர் அம்சமே.

**வஸ்க்**

191.56 கி.கிராம் (அல்லது 122.4 கி.கி) எடைக்குச் சமமான ஓர் அளவு.

**வஹீ**

வேத அறிவிப்பு. வானவர் மூலம் இறைத்தூதர்களுக்கு இறைவனால் வழங்கப்பெற்ற

இறைச்செய்தி; வேத வெளிப்பாடு.

## வானவர்கள்

மலக்குகள். மனித இனம், ஜின் இனம் அல்லாத வேறோர் இனத்தார். ஒளியால் படைக்கப்பெற்ற இவர்கள் ஆண்பாலினருமல்லர்; பெண்பாலினருமல்லர். இறைவனின் உத்தரவுகளைச் செய்து முடிப்பதும் இறைவனை வழிபடுவதும் துதிப்பதுமே இவர்களின் பணிகளாகும். இவர்களுக்கு ஊண், உறக்கம், உறவு, திருமணம், ஆசாபாசம், சந்ததி ஆகிய எதுவும் கிடையா.

## விடைபெறும் ஹஜ்

ஹஜ்ஜத்துல் வதா. ஹஜ் கடமையாக்கப்பட்டபின் நபி (ஸல்) அவர்கள் இறப்பதற்கு முந்தைய (ஹிஜ்ரீ 10ஆம்) ஆண்டில் முதலாவதாகவும் இறுதியாகவும் செய்த ஹஜ் 'ஹஜ்ஜத்துல் வதா' (விடைபெறும் ஹஜ்) என்று கூறப்படுகிறது.

## வித்ர்

ஒற்றை, ஒற்றையானவன் என்பது பொருள். இஷா தொழுகைக்குப் பின்பு அல்லது தஹஜ்ஜுத் (இரவுத்) தொழுகைக்குப் பின்பு தொழப்படும் ஒற்றைப்படையான ரக்அத் கொண்ட தொழுகைக்கு 'வித்ர் தொழுகை' என்பர்.

## ழிஹார்

தாயொப்பு மணவிலக்கு. ஒருவர் தம் மனைவியை தம் தாய்க்கு ஒப்பிடுவதை 'ழிஹார்' என்பர். 'நீ என்னைப் பொறுத்த வரை என் தாயின் முதுகைப் போன்று உள்ளாய்' என்று ஒருவர் தம்முடைய மனைவியிடம் கூறி, இதன் மூலம் மனைவியை மணவிலக்குச் செய்யும் வழக்கமே 'ழிஹார்' என அறியப்படுகிறது. மணவிலக்கு அளிக்க மக்களால் பயன்படுத்தப்பட்டுவந்த இந்த நடைமுறை, பின்னர் பரிகாரம் காண வேண்டிய பாவங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டது. (காண்க: குர்ஆன்: 58:3,4)

## ஜம்ரத்

'ஜம்ரத்' என்பதற்கு 'கற்கள்' என்பது பொருள். ஹஜ்ஜின்போது 'மினா' என்ற இடத்தில் ஷைத்தானைக் கல்லால் எறிய வேண்டிய இடம். மினாவில் மூன்று இடங்களில் கல் எறிய வேண்டும். முதல் தடவை எறிவதற்கு 'ஜம்ரத்துல் ஊலா' என்றும், இரண்டாவது தடவை எறிவதற்கு 'ஜம்ரத்துல் உஸ்த்தா' என்றும், இறுதியாக எறிவதற்கு 'ஜம்ரத்துல் அகபா' என்றும் கூறப்படும்.

## ஜமல் போர்

'ஒட்டகப் போர்' என்பது சொற்பொருள். ஹிஜ்ரீ 36ஆம் ஆண்டு (கி.பி. 656) பஸ்ரா

(இராக்) நுழைவு வாயிலில் அலீ (ரலி) அவர்களின் ஆதரவாளர்களுக்கும் ஆயிஷா (ரலி) அவர்களின் ஆதரவாளர்களுக்கும் இடையே நடந்த போர். ஆயிஷா (ரலி) அவர்கள் ஒட்டகச் சிவிகையில் இருந்தவாறு இந்தப் போரில் கலந்துகொண்டதால் இது 'ஒட்டகப் போர்' என அழைக்கப்படலாயிற்று.

## ஜனாஸா தொழுகை

பிரேதத் தொழுகை; இறுதித் தொழுகை. இறந்தவருக்காகப் பிரார்த்தித்து தொழுவிக்கப்படும் இறுதித் தொழுகைக்கு 'ஜனாஸா தொழுகை' என்பர். 'ஜனாஸா' எனும் சொல் 'பிரேதம், பிரேதம் வைக்கப்பட்டுள்ள பெட்டி' இரண்டையும் குறிக்கும்.

## ஜாஹிலிய்யா

காண்க: அறியாமைக் காலம்.

## ஜிப்ரீல்

ஜிப்ரால், ஜிப்ராயீல் (Angel Cabriel). இறைவனிடமிருந்து இறைத்தூதர்களுக்குச் செய்தி கொண்டுவந்த வானவர். இவரே வானவர்களின் தலைவர் ஆவார்.

## ஜின்

Ginn. மனிதனும் வானவரும் அல்லாத ஓர் இனம். இந்த இனம் தீப்பிழம்பால் படைக்கப்பட்டதாகும். கண்ணுக்குத் தெரியாத வாயுவாகவும் மனிதன் உள்பட பல்வேறு உயிரினங்களின் தோற்றத்திலும் ஜின்கள் மாறவல்லனவாகும். மனிதனுக்கு முன்பே இந்த இனம் படைக்கப்பட்டுவிட்டது. ஜின்களில் ஆண், பெண், சந்ததிப் பெருக்கம், மார்க்கச் சட்டம் ஆகியவை உண்டு. இவர்களுக்கும் நன்மை-தீமை முதலியவற்றில் தன்னியலாற்றல் உண்டு. ஷைத்தான்களின் தந்தையான இப்லீஸ் இந்த இனத்தில் பிறந்தவன் ஆவான்.

## ஜிஸ்யா

காப்புவரி. இஸ்லாமிய அரசின் கீழ் அதன் பாதுகாப்பில் வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிமல்லாத குடிமக்களுக்கு முஸ்லிம்களுக்கிருந்த அனைத்து உரிமைகளும் அளிக்கப்பட்டன. இந்தக் குடிமக்களுக்கு போரில் கலந்துகொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இந்த விலக்கால் அவர்கள் அமைதியான வாழ்க்கை வாழவும் வளரவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இத்தகைய நியாயமான காரணங்களுக்காக மிகக் குறைந்த விகிதத்தில் 'ஜிஸ்யா' எனும் காப்பு வரி அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது. இந்த வரியைப் பெண்களும் ஏழைகளும் செலுத்த வேண்டியதில்லை. இதை

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இருந்த முஸ்லிமல்லாத அரசுகள்கூட இஸ்லாமியப் பேரரசுக்குக் கப்பமாகக் கட்டிவந்தன. நபி (ஸல்) அவர்களது காலத்தில் இது வருடத்திற்கு 10 திர்ஹங்களாக இருந்தது. மேலும், முஸ்லிமல்லாத ஒருவர் இஸ்லாமியப் படையில் சேர்ந்து பணியாற்றும் பொழுது அவருக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

## ஜிஹாத்

இறைதிருப்தியைப் பெறுகின்ற ஒரே நோக்கத்துடன் தர்மத்தைக் காப்பதற்காக அதர்மத்தை எதிர்த்து, இறைவனின் வரம்புகளுக்கு உட்பட்டு அறப்போர் புரிதல். சொல்லாலும் செயலாலும் உண்மை முஸ்லிமாக வாழ முயலுதல்.

## ஜுமாதல் ஊலா

இஸ்லாமிய ஆண்டின் 5ஆவது மாதம்.

## ஜுமாதல் ஆகிரா

இஸ்லாமிய ஆண்டின் 6ஆவது மாதம்.

## ஜுமுஆ

வெள்ளிக்கிழமை. இந்நாளில் முஸ்லிம்கள் சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த பின்பு பள்ளிவாசலில் ஒன்றுகூடி 'ஜுமுஆ' எனும் சிறப்புத் தொழுகையை நடத்துவதால் இது 'ஜுமுஆ நாள்' (ஒன்றுகூடும் நாள்) என்றழைக்கப்படுகிறது.

## ஷஅபான்

இஸ்லாமிய ஆண்டின் எட்டாவது மாதம்.

## ஷவ்வால்

இஸ்லாமிய ஆண்டின் பத்தாவது மாதம்.

## ஷாம்

அக்காலத்தில் சிரியா, பாலஸ்தீன், ஜோர்டான், லெபனான் உள்ளிட்ட நாடுகள் சேர்ந்த ஐக்கிய நாட்டின் பெயராகும். இன்று அதன் பெரும் பகுதி சிரியாவில் அமைந்துள்ளது.

## ஷுஐப் (அலை)

நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் வந்த ஓர் இறைத்தூதர். அன்னார் வடமேற்கு சஊதியிலுள்ள மலைப் பிரதேசமான 'மத்யன்' பகுதிக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள். ஓரிறைக் கோட்பாட்டையும்

வணிக நேர்மையையும் வலியுறுத்தி தம் மக்களிடையே தீவிரப் பிரசாரம் மேற்கொண்டார்கள்.

### ஷைத்தான்

சாத்தான் (Satan). இப்லீஸின் சந்ததி. இவனைக் கிறித்தவர்கள் 'அசுத்த ஆவி' என்பர். ஜின் இனத்தைச் சேர்ந்த இவர்களுக்குச் சந்ததிகளும் சேனைகளும் உண்டு. கண்ணுக்குத் தெரியாமல் மறைவாக இருந்துகொண்டே மனிதர்களைக் கெடுப்பது இவர்களின் முக்கியப் பணியாகும்.

### ஸகரிய்யா (அலை)

சகரியா. கி.மு. முதலாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் இஸ்ரவேலர்களுக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள். நபி தாவூத் (அலை) அவர்களின் வழித்தோன்றலான இவர்களே அன்னை மர்யம் (அலை) அவர்களை வளர்த்தார்கள். நபி யஹ்யா (அலை) அவர்கள் அன்னாரின் புதல்வராவார்.

### ஸகாத்

கட்டாயக் கொடை. ஆண்டு முழுவதும் ஒரு குறிப்பிட்ட அளவு செல்வம் ஒரு முஸ்லிமிடம் தேங்கியிருந்தால் அவர் அதிலிருந்து இரண்டரை சதவீதம் கட்டாயமாக வழங்க வேண்டும். குர்ஆனில் (9:60) குறிப்பிடப்பட்டுள்ள எட்டுப் பிரிவினரில் எவருக்கேனும் இது வழங்கப்பட வேண்டும்.

### ஸதகா

கருணைக் கொடை. ஒருவர் தன்னிச்சையுடன் விரும்பி வழங்கும் தர்மத்திற்கே ஸதகா என்பர். சில வேளைகளில் கட்டாயக் கொடையான ஸகாத்திற்கும் 'ஸதகா' என்பர்.

### ஸஃபா

மக்காவில் கஅபாவுக்கு அருகே அமைந்துள்ள ஒரு சிறிய மலைக் குன்று.

### ஸஃபர்

இஸ்லாமிய ஆண்டின் இரண்டாவது மாதம்.

### ஸபூர்

தாவீது சங்கீதம்; தாவீதின் தோத்திரப் பாடல்கள் (Book Of Psalms). நபி யஅகூப் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் வந்த இறைத்தூதர் தாவூத் (David கி.மு. 1024-924) அவர்களுக்கு இறைவன் அருளிய வேதம். தவ்ராத், இன்ஜீல், குர்ஆன் ஆகிய மூன்று வேதங்களையும் சேர்த்து 'ஸுபுர்' என்பர்.

### ஸம்ஸம்

சஊதி அரேபியாவில் திருமக்காவில் இறையாலயம் புனித கஅபாவுக்கு அருகிலுள்ள புனிதம் நிறைந்த வற்றாத வரலாற்றுச் சிறப்புமிக்க ஜீவ நீரூற்று.

### ஸமூத்

வடமேற்கு அரேபியாவில் வாழ்ந்த ஒரு பழம்பெரும் சமூகத்தாரின் பெயராகும். ஹிஜ்ர் எனும் ஊர் அவர்களின் தலைநகராக விளங்கியது. அது இன்று 'மதாயினு ஸாலிஹ்' என அழைக்கப்படுகிறது. 'ஆத்' சமூகத்தாருக்குப் பின்னர் வாழ்ந்த இந்தக் கூட்டத்தார் கட்டடக் கலையில் சிறந்து விளங்கினர். கல் மாளிகைகள், மலைக் குகைகள் அமைத்து அவர்கள் வசித்துவந்தனர். ஆடம்பர வாழ்விலும் சிலை வழிபாட்டிலும் மூழ்கிப்போயிருந்த 'ஸமூத்' கூட்டத்தாரை நல்வழிப்படுத்த அவர்களில் ஒருவரான ஸாலிஹ் (அலை) அவர்களை இறைத்தூதராக அல்லாஹ் அனுப்பினான்.

### (ஸல்)

'ஸல்லல்லாஹு அலைஹி வ சல்லம்' (அல்லாஹ்வின் கருணையும் சாந்தியும் அன்னார்மீது உண்டாவதாக!) என்பதன் சுருக்கம். இது முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்காக இறைவனிடம் மக்கள் செய்யும் பிரார்த்தனை ஆகும். எனவே, நபிகளாரின் பெயருடன் இணைத்து இதைக் குறிப்பிடுவர். இதை 'ஸலவாத்' என்பர்.

### ஸவ்ர்

மக்காவிற்கு அருகிலுள்ள ஒரு மலையின் பெயர். இதிலுள்ள குகையொன்றில்தான் நபி (ஸல்) அவர்களும் தோழர் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹிஜ்ரத் பயணத்தின்போது ஒளிந்திருந்தார்கள்.

### ஸலவாத்

நபி (ஸல்) அவர்களுக்காக மக்கள் செய்யும் வேண்டுதல்; பிரார்த்தனை.

### ஸாஉ

மதீனாவில் நடைமுறையில் இருந்துவந்த 2.135 கி.கி. எடை கொண்ட ஓர் அளவு.

### ஸாலிஹ் (அலை)

கி.மு. 2000மாவது ஆண்டு (2430) சஊதியிலுள்ள 'அல்ஹிஜ்ர்' என்னும் இடத்தில் வாழ்ந்த இறைத்தூதர். ஆடம்பர வாழ்வில் மூழ்கிச் சிலை வழிபாட்டில் மாய்ந்து போய்க்கொண்டிருந்த 'ஸமூத்' கூட்டத்தாரைச் சீர்திருத்த பாடுபட்டார்கள்.

## ஸித்தீக்

'மிகவும் உண்மைப்படுத்தக்கூடியவர்' என்பது பொருள். நபித்தோழர் அபூபக்ர் (ரலி) அவர்கள் 'அஸ்ஸித்தீக்' என்று அழைக்கப்பட்டார்கள்.

## ஸிஃப்ஃபீன்

கி.பி. 657ஆவது ஆண்டில் சிரியா நாட்டின் யூப்ரட்டீஸ் நதிக்கரையில் 'ஸிஃப்ஃபீன்' எனும் இடத்தில் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களின் ஆதரவாளர்களுக்கும் முஆவியா பின் அபீசுஃப்யான் (ரலி) அவர்களின் ஆதரவாளர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்.

## ஹத்தீம்

'இடிந்தது' என்பது பொருள். புனிதக் கஅபாவை ஒட்டி வில் வடிவத்தில் அமைந்த கால்வட்டச் சுவரை இது குறிக்கும். இதற்கு 'ஹிஜ்ர்' என்றும் கூறுவர்.

## ஹதீஸ்

காண்க: நபிமொழி.

## ஹதீஸ் குத்சீ

'அல்லாஹ் சொன்னான்' என்ற வார்த்தைப் பிரயோகத்தோடு நபி (ஸல்) அவர்கள் கூறிய பொன்மொழி. இதற்குப் 'பரிசுத்த வாக்கு' என்பது சொற்பொருள். இது, குர்ஆன் வசனம் ஆகாது.

## ஹர்ரா

மதீனாவுக்கு வெளியே பாறைகள் நிறைந்த பகுதி. உமய்யாக்களின் இரண்டாம் கலீஃபா யஸீதுக்கும் மதீனா முஸ்லிம்களுக்கும் இடையே ஹிஜ்ரீ 63ஆம் ஆண்டு (கி.பி. 683) இங்கு நடைபெற்ற சண்டையே 'அல்ஹர்ரா போர்' எனப்படுகிறது.

## ஹரம்

(அ) அபயமளிக்கும் புனித பூமி. புனித மக்காவும் புனித மதீனாவும் அபயம் அளிக்கும் புனித பூமிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கு போர் புரியக் கூடாது. எந்த உயிரினத்திற்கும் சிறிதளவும் இடையூறு தரக் கூடாது.

(ஆ) மஸ்ஜிதுல் ஹராம் (புனிதப் பள்ளிவாசல்); திருமக்காவிலுள்ள இறையில்லமான புனித கஅபாவைச் சுற்றியுள்ள பள்ளிவாசல். இதையும் மக்கள் பேச்சு வழக்கில் 'ஹரம்' என்பர்.

## ஹராம்

(அ) திருக்குர்ஆனாலும் நபி (ஸல்) அவர்களாலும் சட்டபூர்வமாகத் தடை

செய்யப்பட்டது. சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டதற்கு 'ஹலால் என்று பெயர்.

(ஆ) புனிதம் வாய்ந்தது; கண்ணியப்படுத்தப்பட வேண்டியது. முஹர்ரம் மாதத்தை 'அஷ்ஷஹ்ருல் ஹராம்' (புனித மாதம்) என்றும், மக்கா நகரை 'அல்பலதுல் ஹராம்' (புனித நகரம்) என்றும், கஅபாவை உள்ளடக்கிய இறையில்லத்தை 'அல்மஸ்ஜிதுல் ஹராம்' (புனித பள்ளிவாசல்) என்றும் கூறுவர்.

## ஹரூரிய்யா

காண்க: காரிஜிய்யா.

## ஹலால்

அனுமதிக்கப்பட்டது என்பது பொருள். புனித ஹஜ்ஜின்போது இஹ்ராம் உடையைக் களைந்து இயல்பான நிலைக்குத் திரும்புவதற்கும் 'ஹலால்' எனும் சொல் ஆளப்படுவதுண்டு.

## ஹவ்ளுல் கவ்ஸர்

சொர்க்கத்தில் நபி (ஸல்) அவர்களுக்குச் சிறப்புப் பரிசாக இறைவன் கொடுக்க இருக்கின்ற 'அல்கவ்ஸர்' நீர்த் தடாகம்.

## ஹஜ்

மக்காவிலுள்ள உலகின் முதல் இறையில்லமான புனித கஅபாவைத் தரிசித்து நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு வழிபாடு. இது இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும்.

## ஹஜ்ஜதுல் வதா

காண்க: விடைபெறும் ஹஜ்.

## ஹஜ்ஜாஜ் பின் யூசுஃப்

(ஹிஜ்ரீ: 95, கி.பி. 714). தாயிஃப் வாசியான இவர் கலீஃபா அப்துல் மலிக் பின் மர்வானின் படைத் தளபதியாகத் திகழ்ந்தார். இலக்கியவாதியான இவர் (மக்கா, மதீனா, தாயிஃப், இராக் உள்ளிட்ட) ஹிஜாஸ் மாநிலத்தின் ஆளுநராகப் பதவி வகித்தார். இவரது ஆட்சியில் கொடுங்கோன்மை மேலோங்கியிருந்தது.

## ஹஜருல் அஸ்வத்

கஅபாவின் ஒரு மூலையில் பதிக்கப்பட்டுள்ள கறுப்புக் கல். ஹஜ்ஜின்போது இதை முத்தமிடல் நபிவழியாகும்.

**ஹாரூன் (அலை)**

ஆரோன் (Aaron). நபி மூசா (அலை) அவர்களின் சகோதரர். எகிப்தின் சர்வாதிகாரி இரண்டாம் ரம்சேஸை எதிர்த்துப் போராடியதில் மூசா (அலை) அவர்களுக்கு உறுதுணையாக நின்றார்கள்.

**ஹாஜர்**

அஜர்; ஆகார். நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் இரண்டாவது துணைவியார். இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களின் அன்னை.

**ஹாஜி**

ஹஜ் கடமையை நிறைவேற்றியவர்.

**ஹிரக்ளீயஸ்**

ஹிரக்ல் (Heraclius - கி.பி. 610-641). இது நபி (ஸல்) அவர்களது காலத்தில் இருந்த கிழக்கு ரோமானியப் பேரரசர் சீசரின் பெயர். இவரோடு கிழக்கு ரோமப் பேரரசு முடிவுக்கு வந்தது.

**ஹிரா**

மக்காவிற்கு அருகிலுள்ள 'ஜபலுந் நூர்' எனும் மலை. இதிலுள்ள ஒரு குகையில் நபி (ஸல்) அவர்கள் தங்கியிருந்தபோதுதான் குர்ஆனின் முதல் திருவசனம் அருளப்பெற்றது.

**ஹிஜ்ர்**

வடக்கு சவூதிய்யாவில் 'தைமா'வுக்கு தென்மேற்கே உள்ள ஓர் இடம். இங்குதான் இறைத்தூதர் ஸாலிஹ் (அலை) அவர்கள் வாழ்ந்தார்கள். இன்று அந்த இடத்தை 'மதாயினு ஸாலிஹ்' (நபி ஸாலிஹின் நகரம்) என்று அழைக்கின்றனர்.

**ஹிஜ்ரத்**

நாடு துறத்தல், புலம்பெயரல் என்பது இதன் சொற்பொருள். ஒருவர் இறை மார்க்கத்தைப் பின்பற்றத் தடைகள் ஏற்படும்போது தாம் வசிக்குமிடத்தைத் துறந்து வேற்றிடம் செல்லல். இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கி.பி. 622ஆம் ஆண்டு மக்காவைத் துறந்து மதீனா சென்ற நிகழ்ச்சி இஸ்லாமிய வழக்கில் 'ஹிஜ்ரத்' எனப்படுகிறது. நபித்தோழர்கள் முதல் முறையாக அபிசீனிய நாட்டிற்கு மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணத்தை 'ஹிஜ்ரத்துல் ஊலா' (முதலாவது ஹிஜ்ரத்) என்றும், மக்காவிலிருந்து மதீனாவிற்கு நபிகளாரும் தோழர்களும் மேற்கொண்ட ஹிஜ்ரத்தை 'ஹிஜ்ரத்துஸ்

ஸானியா' (இரண்டாவது ஹிஜ்ரத்) அல்லது 'ஹிஜ்ரத்துந் நபீ' (நபியின் ஹிஜ்ரத்) என்றும் வழங்குவர்.

## ஹிஜ்ரீ

இஸ்லாமிய ஆண்டு. ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே 'ஹிஜ்ரீ' எனும் இஸ்லாமிய ஆண்டு துவங்குகிறது. இஸ்லாமிய ஆண்டின் மாதங்கள் வருமாறு: 1. முஹர்ரம் 2. ஸஃபர் 3. ரபீஉல் அவ்வல் 4. ரபீஉல் ஆகிர் 5. ஜுமாதல் ஊலா 6. ஜுமாதல் ஆகிரா 7. ரஜப் 8. ஷஅபான் 9. ரமளான் 10. ஷவ்வால் 11. துல்கஅதா 12. துல்ஹிஜ்ஜா.

## ஹிஜாஸ்

சவூதி அரேபியாவில் செங்கடலுக்கு அருகே, வடக்கே அகபா வளைகுடாவிலிருந்து தெற்கே 'அசீர்'வரை பரந்து கிடக்கும் பகுதி. இந்த நிலப் பகுதியில்தான் மக்கா, தாயிஃப், தபூக் ஆகிய நகரங்கள் உள்ளன. புனித மக்கா இதன் தலைநகராக விளங்கியது.

## ஹுதைபியா (ஹுதைபிய்யா)

இது மக்காவிலிருந்து சிறிது தொலைவில் உள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். ஹிஜ்ரீ 6ஆம் ஆண்டு (கி.பி. 627) நபி (ஸல்) அவர்களும் மக்காவாசிகளும் இங்கு செய்துகொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் 'ஹுதைபியா ஒப்பந்தம்', 'ஹுதைபிய்யா உடன்படிக்கை' எனப்படுகின்றது.

## ஹுபல்

அறியாமைக் கால மக்கள் வழிபட்டுவந்த ஒரு சிலையின் பெயர். இது கஅபாவுக்குள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. நபியவர்கள் ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு (கி.பி. 630) மக்காவை வெற்றி கொண்டபோது இதை அகற்றினார்கள்.

## ஹுனைன்

மக்காவுக்கும் தாயிஃபுக்கும் இடையே 'அரஃபா' பெருவெளித் திசையில், மக்காவிலிருந்து பத்துக்கும் அதிகமான மைல் தொலைவில் உள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயர். ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு ஷவ்வால் (கி.பி. 630) மாதம் 'ஹவாஸின்' எனும் அரபுக் குலத்தாருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற போரே 'ஹுனைன் போர்' எனப்படுகிறது.

## ஹூத் (அலை)

நபி நூஹ் (அலை) அவர்களுக்குப் பின்னர் வந்த இறைத்தூதர்களில் ஒருவர் (கி.மு.

2538). பழங்கால அரபு சமூகத்தாரான 'ஆத்' சமூகத்தாருக்கு நல்வழி காட்ட ஹூத் (அலை) அவர்களை அல்லாஹ் இறைத்தூதராக நியமித்தான். விவிலியம் பழைய ஏற்பாட்டில் இவரது பெயரே 'ஏபேர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது சிலரது கருத்தாகும்.

## ஹூருல் ஈன்

கண்ணழகுக் கன்னியர். எவரது கரமும் படாமல் சொர்க்கவாசிகளுக்காகக் காத்திருக்கும் அழகு நங்கையர். தூய்மைக்குப் பெயர்போன இவர்களுக்கு எச்சில், சளி, மாதவிடாய் உள்ளிட்ட எதுவும் ஏற்படாது.

Rahmath Pathippagam